விலை சதம் 5

கொழும்பு பதிப்பு

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்.
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE.)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
Phone: 3411

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

நாமார்க்கும் குடியல்லோம்

புத்தகம் 1 | கொழும்பு, சர்வஜித்து வரு புரட்டாசி மீ 27உ திங்கட்கிழமை — Colombo, October, 13, 1947 — ஹிஜிரி 1366 துல்கஃதா பிறை 27 | இதழ் 132

பாலஸ்தீனத்தை கைப்பற்ற 7 அராபிய நாடுகள் போர்க்கோலம்

2,30,000 அராபியத் துருப்புகள் ஆயத்தம்

யூதக் குடியரசு நிறுவ 65,000 யூதத் துருப்புகளின் முஸ்தீபு

பிரிவினையை அமெரிக்கா ஆதரிக்கிறது; இந்தியா எதிர்க்கிறது

டமஸ்கஸ், அக். 11

12,000 சிரியா சோல்ஜர்கள் ராணுவ ஒத்திகை நடத்தி விட்டு போருக்கு ஆயத்தமாக நிற்பதற்காக இன்று பாலஸ்தீன எல்லைப் பிரதேசங்களுக்குச் சென்றனர். சிரியா பாதுகாப்பு மந்திரி விமானத்திலிருந்துகொண்டு அவர்கள் போவதைப் பார்வையிட்டார்.

பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டிஷ் படைகள் காலியாகும் சமயம் அவ்விடங்களை அராபியப் படைகள் கைப்பற்றிக்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதன்பிறகு ஜெருஸலேம் கிராண்ட் முப்தி தலைமையில் பாலஸ்தீனக் குடியரசு நிறுவப்படும். பாலஸ்தீனம் முழுவதும் அக் குடியரசு சர்க்காருக்குட்படுத்தப்படும்.

லெபானனில் கிராண்ட் முப்தி

செய்ரோ, அக். 11

பெய்ரூத்தில் நடைபெற்ற அராபிய லீக் கூட்டத்திற்குச் சென்ற கிராண்ட் முப்தி தற்சமயம் லெபானனிலேயே தங்கி இருப்பார். பாலஸ்தீன நிலைமைகளைக் கவனிக்கவும் அங்குள்ள தனது ஆட்களுடன் கலந்து பேசுவதற்கும் லெபானன் வசதியுடையதென்று அவர் கருதுகிறார்.

பாலஸ்தீனத்தின் நெருக்கடியான நிலையைமுன்னிட்டு அராபிய லீக் கூட்டம் நிரந்தரமாகக் கூடி ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கும். 7 அராபிய நாடுகளின் பிரதிநிதிகள் கோஷ்டிகளின் தலைவர்கள் மட்டும் இவ்வாரக் கடைசியில் தத்தம் நாடுகளுக்குத் திரும்புவார்கள். தேவையான சமயம் அழைப்பு வந்ததும் அவர்கள் 24 மணி நேரத்திற்குள் கூட்டத்திற்கு வந்து விடுவார்கள்.

2,30,000 துருப்புகள்

பெய்ரூத், அக். 11

பிரிட்டன் வெளியேறியதும் பாலஸ்தீனத்தை அராபியர்கள் கைப்பற்றுவதற்கு 20 டிவிஷன்கள் அதாவது 2 30,000 அராபிய துருப்புகள் தயாராக இருக்கின்றன. அவர்களுக்கு நன்கு பயிற்சி அளிக்கப்பட்டு தகுந்த ஆயுதங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. பாலஸ்தீனத்தை அராபியர்கள் கைப்பற்ற அராபிய லீக் கூட்டத்தில் 7 அராபிய நாடுகளும் உறுதி செய்திருக்கின்றன. ஒரு வாரமாக நடைபெற்ற கூட்டத்தின் பயனாக அராபிய லீக் இந்த 'யுத்த ஆயத்த' அறிக்கை தயாரித்திருக்கிறது.

சைன்ய பலம்

அராபிய நாடுகளின் சைன்ய பலம் பின்வருமாறு:-

எகிப்து 1,20,000; ஈராக் 60,000; சிரியா 18,000 லெபானன் 8000; டிரான்ஸ்ஜோர்டான் 12,000 இவை தவிர பாலஸ்தீன அராபியர் வசம் 10,000 வீரர்களிருக்கிறார்கள். இவர்கள் பாலஸ்தீன அராபிய ராணுவ ஸ்தாபனங்களான நஜாதா, பத்துவா ஆகியவைகளைச் சேர்ந்தவர்கள்.

சவூதி அரேபியாவும் யேமனும் தங்கள் சைன்ய பலத்தை தெரியப்படுத்தவில்லை. அராபிய லீக்கின் திட்டப்படி எல்லா அராபியத் துருப்புகளும் சேர்ந்து 2,30,000 பேர்கள் பாலஸ்தீனத்தைக் கைப்பற்றச் சென்றால் பாலஸ்தீனத்திலுள்ள 80,000 யூதர்கள் (ஆண்களும் பெண்களும்) இந்த அராபியர்களை எதிர்க்கவேண்டியிருக்கும். பாலஸ்தீன எல்லைப்புறங்களுக்கு அராபியத் துருப்புகள் சென்றவண்ணமிருக்கின்றன.

எகிப்தியத் துருப்புகளுடன் சிரியா, லெபானன் துருப்புகளும் பாலஸ்தீன எல்லைப்புறம் நோக்கிச் சென்றிருக்கின்றன.

யூதர்கள் திட்டம்

ஜெருசலேம், அக். 11

யூதர்களின் ராணுவப்பயிற்சி ஸ்தாபனம் மூலம் கீழ்க்கண்ட தகவல் கிடைத்திருக்கிறது. அந்த ஸ்தாபனத்திற்கு ஹகானா என்றுபெயர். இது 65,000 யூத இளைஞர்களுக்கு யுத்தப் பயிற்சி அளித்திருக்கிறது. இப்பொழுது மறைமுகப் புரட்சியில் ஈடுபடுள்ள இந்த யூத வாலிபர்கள்

(4-ம் பக்கம் பார்க்க)

இளவரசி கலியாணத்துக்கு இலங்கையின் பரிசு

15,000 ரூபாய் பணம் செலவு

பிரதம மந்திரி கிரஹப்பிரவேசத்திற்கு இரண்டரை லக்ஷம் ரூபாய்

["சுதந்திரன்" அரசியல் நிருபர்]

கொழும்பு, அக். 13

பிரிட்டிஷ் அரசிளங் குமாரியாகிய எலிஸபெத் அவர்களின் விவாக தினத்தன்று ஓர் பரிசில் வழங்குவதற்காக, இலங்கையின் புதிய மந்திரிசபை ரூபாய் பதினையாயிரம் அனுமதித்துள்ளனர்.

(1) இலங்கை இரத்தினம், (2) இலங்கையிலுள்ள மரத்தால் செய்யப்பட்ட வீட்டுத் தளவாடங்கள், (3) கண்டியர் வெள்ளிச் சாமான்கள் ஆகிய இம் மூன்றில் ஒன்றை கண்ணியமான பரிசிலாகத் தெரிவுசெய்து கொள்ளுமாறு மந்திரி சபையினர் தற்காலிக பிரதம காரியதரிசி ஸர். சார்ல்ஸ் கொலின்ஸைக் கேட்டிருக்கின்றனர்.

நவம்பர் மாதம் 25-ம் தேதி பாராளுமன்றத் திறப்பு விழா வாகையால் இலங்கையின் பிரதம மந்திரியாவது, அல்லது வேறு மந்திரிகளாவது இளவரசியின் விவாகத்திற்குச் சமூகமளிக்க மாட்டார்களென்றே நம்பப்படுகிறது. ஆயின் லண்டனிலுள்ள இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதியாகிய திரு. ஜீ. ஸி. எஸ். கொரியா இலங்கை சார்பாகச் சமூகமளிப்பார்.

பிரதமர் கிரஹப்பிரவேசம்!

பிரதம மந்திரி திரு டி. எஸ் சேனநாயக்கா நவம்பர் மாதம் 20-ம் தேதியன்று, தமது உத்தியோக பூர்வமான மந்திரி மாளிகையில் கிரஹப்பிரவேசஞ் செய்வார். அம் மாளிகை ஏற்கனவே சொல்லியபடி கொள்ளுப்பிட்டியில் உள்ள "டெம்பிள் ட்ரீஸ்" என்னும் வீடாகும்.

இம் மாளிகையில், முன்பு இலங்கையின் பிரதம காரிய தரிசி வசித்தார்.

இரண்டரை லட்சம் செலவு!

இப்பொழுது "டெம்பிள் ட்ரீஸ்" என்னும் மாளிகை பகிரங்க வேலைப் பகுதி இலாகாவால் இரண்டரை லட்சம் ரூபாய் செலவில் புதுப்பித்து அமைக்கப்படுகிறது.

மோட்டார் வண்டியும்!

திரு சேனநாயக்காவுக்கு அரசாங்கம் ஒரு திறமான மோட்டார் வண்டியையும் பெற்றுக் கொடுக்கும்.

பிரதிநிதிகள் 'கிளப்'

பிரதம மந்திரியின் மாளிகை திருத்தியமைக்கும் வேலைகள் முடிவு பெற்றதும், பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்கள் தங்குவதற்கு "சிறுவஸ்தி" என்னும் கட்டிடத்தில ஒரு "கிளப்" ஏற்படுத்தப்படும்.

இங்கு தூரத்திலிருந்து வரும் பிரதிநிதிகளுக்குப் படுக்கை வசதிகளும் இருக்கும்.

சிறுவஸ்தி என்னும் கட்டிடத்தை திரு. எச். டபிள்யூ. அமரசூரியாவிடமிருந்து அரசாங்கம் ரூ. 275,000 க்கு வாங்கியிருக்கின்றது.

பதில் "ஸ்பீக்கர்"

யூ. என். பிக் கட்சியினர் திரு. ஆர். ஏ. டி மெல் அவர்களைப் பதில் ஸ்பீக்கர் பதவிக்கு ஆதரிப்பதாகத் தெரிகிறது.

பாராளுமன்ற எதிர்க் கட்சிப் பிரதிநிதிகளும் பதில் ஸ்பீக்கர் பதவிக்குத் தம்முள் ஒருவரை திரு. மெல் அவர்களுடன் போட்டியிடுவதற்கு நியமிப்பார்களாமென அறியப்படுகிறது.

இதற்காக இன்று எதிர்க் கட்சியினர் யாவரும் கூடுவார்கள் என்றும் பேசப்படுகிறது.

பர்மா ரயில்வே இந்திய சிப்பந்திகள்

இந்தியா திரும்புவதா? பர்மாவிலிருப்பதா?

நான்கு வழிகள் கூறப்படுகின்றன

ரங்கூன், அக். 10

பர்மா ரயில்வேக்களிலுள்ள சிப்பந்திகள் அனைவரும் தங்கள் வருங்கால திட்டங்களைத் தீர்மானித்து அக்டோபர் 20-ம் தேதிக்கு முன்பு அதிகாரிகளுக்கு தகவல்கொடுக்கவேண்டுமென்று பிரதம கமிஷனர் வற்புறுத்தியிருப்பதாக இன்று ரயில்வே 'கெஜட்டில்' அறிவிக்கப்பட்டது.

அந்த அறிக்கைப்பிரகாரம் பர்மா ரயில்வேக்களிலுள்ள இந்திய சிப்பந்திகள் அடியிற் கண்ட நான்கு வழிகளில் ஒன்றை பின்பற்ற வேண்டும்.

1. இந்தியபிரஜா உரிமையை விட்டு புது அரசியலின் பிரகாரம் பர்மிய பிரஜைகளாக வேண்டும்.
2. இந்திய பிரஜா உரிமையை விட்டு யோக்யதாம்சமிருந்தால் பர்மா பிரஜா உரிமைபெறுதல்.
3. இந்திய பிரஜா உரிமையுடனேயே பர்மாவிலிருப்பது.
4. இந்திய பிரஜா உரிமையுடன் இந்தியாவுக்கோ அல்லது பாகிஸ்தானுக்கோ திரும்புதல்.

பர்மிய பிரஜா உரிமை பெறுவோர் இதர பர்மிய பிரஜைகளுடன் சம நடத்தை பெறுவர். பதவியிலிருப்பதற்கு பர்மிய பாஷைப் பயிற்சி எவ்வளவு தேவையென்பது அனுவசியமாக உயர்த்தப்பட மாட்டாது ஆனால் அவர்கள் இந்திய பிரஜா உரிமையை இழப்பர்.

இந்திய பிரஜா உரிமையுடன் பர்மாவிலிருப்பவர்களுக்கு பர்மா பிரஜைகளுக்குச்சட்டத்தால் ஒதுக்கப்படும் விசேஷ உரிமைகள் இல்லை ஆள் குறைப்பு இருக்குமானால் நியமனங்களுக்குப் பர்மிய பிரஜைகளே சலுகை அளிக்கப்படுவர். இதுவே சர்க்காரின் கொள்கை ஆனால் பர்மியரல்லாத பிரஜைகளுக்கு கஷ்டமில்லாதவாறு செய்ய சர்க்கார் முயலும்.

இந்தியாவுக்குத் திரும்ப விரும்புவோர் அதிகாரிகளுக்கு உடனடியாகத் தகவல் கொடுக்க வேண்டுமென்று கோரப்படுகிறார்கள். அதன் பேரில் பாக்கிகளின் பைசல் இந்தியாவுக்கு பிரயாணம் சாத்யமானால் இந்தியா அல்லது பாக்கிஸ்தான் ரயில் வேக்களில் வேலை இவற்றிற்கு அதிகாரிகள் ஏற்பாடு செய்யக்கூடும்.

தொழிலாளர் உள்பட ரயில்வே சிப்பந்திகள் அனைவரும் ஒரு முடிவு செய்யக் கோரப்படுகின்றனர்.

பிரதம ரயில்வே கமிஷனர் கூறுவதாவது:- தற்போதுள்ள கண்ட்ராக்டை பூர்த்திசெய்ய விரும்பும் இந்தியருக்கு விசேஷ குறுகியகால கண்ட்ராக்ட் தரப்படலாமென்றும் சாதாரண முறையில் பாக்கி பைசலான பிறகு அந்த இந்தியர் குறுகிய கால கண்ட்ராக்ட் கடமை ஏற்கலாமென்றும் சர்க்காருக்கு ரயில்வே நிர்வாகம் யோசனை கூறியது. இந்த யோசனை கூறப்படுவதற்குக் காரணம் இதுவே. இந்திய சிப்பந்திகளில் ஏராளமானவர்கள் திடீரென்று மறைவதால் ரயில்வே சீரமைப்பு வேலை அதிகம் பாதிக்கப்பட்டு விடும்.

ஆசியா தொழில் மகாநாடு

அக்டோபர் 27 முதல் நவம்பர் 8 வரை புதுடில்லியில் நடைபெறும்

இந்திய சர்க்கார் தொழில் மந்திரி திரு. ஜகஜீவன் தலைமை வகிப்பார்

இலங்கை உட்பட 22 நாடுகளிலிருந்து 400 பிரதிநிதிகள் விஜயம்

புதுடில்லி, அக். 12

சர்வதேச தொழில் ஸ்தாபனத்தின் ஆசியா பகுதி ஆரம்ப மகாநாடு அக்டோபர் 27-ம் தேதியிலிருந்து நவம்பர் 8-ம் தேதி வரை புதுடில்லியில் நடைபெறுகிறது. 22 நாடுகளிலிருந்து பிரதிநிதிகளும், ஆலோசகர்களும், பார்வையாளருமாக சுமார் 400 பேர்கள் இம்மகாநாட்டில் கலந்துகொள்ள விஜயம் செய்கிறார்கள்.

இலங்கையிலிருந்தும் பிரதிநிதிகள் வருகிறார்கள்.

இவர்கள் எல்லோரையும் வரவேற்கவும் அவர்கள் தங்கியிருக்க வசதியளிக்கவும், மகாநாட்டைநடத்தி வைக்கவும் இந்திய சர்க்கார் மும்முரமான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இவர்கள் இந்திய சர்க்காரின் விருந்தினராக டில்லியில் தங்கியிருப்பார்கள்.

மகாநாடு இந்திய அரசியல் நிர்ணய சபை அதாவது இந்தியா பார்லிமெண்ட் சபை மண்டபத்தில் நடைபெறும்.

மகாநாடு ஆரம்ப தினத்தில் இந்தியாவின் தலைவர்கள் மகாநாட்டுப் பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுவார்கள். மகாநாட்டுக்குப் இந்திய சர்க்கார் தொழில் மந்திரி திரு ஜகஜீவன்ராம் தலைமை வகிப்பார்.

இந்தியா, பாக்கிஸதான், ஆப்கானிஸதான், இலங்கை, பர்மா, மலேயா, கம்போடியா, கொச்சின் சைனா, லாவோஸ், வியட்நாம், பிரஞ்சு இந்தியா, நியூ காலிடோனியா, டச்சுயூனியன், சைனா, நேபாளம், சயாம், பிலிப்பைன், ஆஸ்திரேலியா, நியூஸிலந்து, அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் மகாநாட்டில் கலந்துகொள்ளும்.

இது ஆசியா பகுதி மகாநாடு என்றழைக்கப்பட்ட போதிலும் தூரகிழக்கு தேசங்களும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றன. அதன் பயனாகவே கைத்தொழில்களில் முன்னேற்றமுள்ள ஆஸ்திரேலியாவும், நியூஸிலந்தும் இதில் கலந்துகொள்கின்றன அமெரிக்கா பிரதிநிதிகள் பார்வையாளர்களாக விஜயம் செய்வார்கள்.

ஆசியாவிலுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களின் சார்பாக பிரதிநிதிகள் கலந்துகொள்வார்கள். ஆசியாவிலுள்ள பிரஞ்சுப் பிரதேசங்களின் சார்பாக பிரஞ்சுப் பிரதிநிதிகளும் டச்சுப் பிரதேசங்களின் சார்பாக டச்சுப் பிரதிநிதிகளும் கலந்து கொள்வார்கள்.

சர்வதேசதொழில்ஸ்தாபனம் யுத்தத்திற்குப் பின் பல பகுதிகளில் தனி மகாநாடு கூட்ட வேண்டுமென்று முடிவு செய்திருந்ததன் பயனாக இந்த ஆசியா தொழில் மகாநாடு நடைபெறுகிறது. தென் அமெரிக்காவில் இப்படியப்பட்ட மூன்று மகாநாடுகள் நடைபெற்றுவிட்டன. ஆனால் ஆசியாவில் இதுவே முதல் மகாநாடாகும்.

கிழக்குலகிலுள்ள தொழில் பிரச்னைகளை ஆராய ஆசியா மகாநாடொன்று கூட்ட வேண்டுமென்று, சர்வதேச தொழில் ஸ்தாபனத்தில் விவாதம் நடைபெற்றபோது சைனாவும் இந்தியாவும் தத்தம் நாட்டில் மகாநாட்டை நடத்த அழைத்தார்கள் அதன் பேரில் முதலாவது ஆரம்ப மகாநாட்டை இந்தியாவில் நடத்துவதென்றும் பின்னர் சைனாவில் அடுத்த மகாநாட்டை நடத்துவதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

ஸ்தாபன முறைப்படி சர்வதேச ஸ்தாபன நிர்வாக சபையின் தலைவர் சர் ஜி எம் எம், எவான்ஸ மகாநாட்டைத் திறந்து வைப்பார். இவர் பிரிட்டிஷ் தொழில் இலாகா அதிகாரி. இம்மகாநாட்டிற்கு பிரிட்டிஷ் பிரதிநிதியாக வருகிறார்.

மகாநாட்டு நடவடிக்கைகளில் விவாதிப்பதற்கு நான்கு விஷயங்களிருக்கின்றன. அவையாவும் சர்வதேச தொழில் ஸ்தாபன தகவல் இலாகா தயாரித்த அறிக்கைகளாகும். இந்த இலாகாதார் ஆசியா நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்து அறிக்கைகளை தயாரித்திருக்கிறார்கள். அவைகள் அந்தந்த நாடுகளாலும் சர்வதேச தொழில் ஸ்தாபன நிர்வாக சபையாலும் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளவையாகும்.

ஆஸ்திரேலியா பிரதிநிதிகள்

ஆஸ்திரேலியா ஹை கமிஷனர் காரியாலயத்தார் அறிவிப்பதாவது:-

ஆசியா தொழில் மகாநாட்டுக்கு ஆஸ்திரேலிய சர்க்கார் தொழில் இலாக்கா உதவிக் காரியதரிசி இ. ஆர். டாப்ஸ், இந்தியாவிலுள்ள ஆஸ்திரேலிய ஹை கமிஷனர் காரியாலய காரியதரிசி ஜே சி ஜி கெவன் ஆகியோர் சர்க்கார் சார்பாகவும், ஆஸ்திரேலியா தொழிலாளர் ஐக்கிய சங்க சார்பாக அதன் காரியதரிசி ஏ இ. மாங்கும், முதலாளிகள் சார்பாக ஆஸ்திரேலிய முதலாளிகள் சங்கக் காரியதரிசி எப ஜே கிலனும் பிரதிநிதிகளாகக் கலந்து கொள்வார்கள். (அ-பிரஸ)

காங்கேசன்துறைக்கு சுகாதார மந்திரி விஜயம் செய்வார்

நேரில் விஷயங்களை அறிய மந்திரியின் ஆவல்

ஆஸ்பத்திரி பிரச்னையை தீர்த்துவைக்க பிரதிநிதியின் அக்கறை

கொழும்பு, அக். 13—

காங்கேசன்துறைப் பகுதி பாராளுமன்றப் பிரதிநிதியாகிய திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் கே. ஸி., நேற்று காலையில், காங்கேசன்துறை ஆஸபத்திரிப் பிரச்னை சம்பந்தமாக, சுகாதார ஸ்தல ஸ்தாபன மந்திரி திரு. பண்டாரநாயக்காவைப் பேட்டி கண்டார்.

திரு. செல்வநாயகம் காங்கேசன்துறை ஆஸ்பத்திரிப் பிரச்னை சம்பந்தமாக மந்திரியைப் பேட்டி கண்டதன் பயனாக, திரு. பண்டாரநாயக்கா கூடிய சீக்கிரத்தில் காங்கேசன்துறைக்குச் சென்று ஆங்குள்ள இராணுவ ஆஸபத்திரியையும், ஷயரோக ஆஸ்பத்திரியையும், இவற்றிற்கு அணித்தாகவுள்ள கிரிமலை முதலிய இடங்களையும் பார்வையிட்டு ஆங்குள்ள மக்களின் அபிப்பிராயங்களையும் நேரடியாகக் கேட்டு அதன் பின்பு இவ்விஷயத்தில் தீர்ப்புக் கூறச் சம்மதித்துள்ளார் என அறியப்படுகிறது.

மந்திரி நேரடியாக பார்வையிடும்வரைக்கும் ஆங்கு ஒன்றும் நடைபெறமாட்டா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன்

THE "SUTANTIRAN"

194 ஏ, பிரட்டாரத் தெரு, கொழும்பு. போன்: 3411.

சர்வஜித்து ஹு புராட்டாசி மீ 27உ திங்கட்கிழமை

போலித் தலைவர்களும் பொய்ப் புகழும்

மக்களாய்ப் பிறந்த நாம் ஒவ்வொருவரும் தேடத்தக்கவைகளுள் தலை சிறந்து நிற்பது புகழ் ஒன்றேயாம். உண்மையாகவே கொடையாலும், கல்வியாலும் வீரத்தாலும் வேறு செயற்கரிய செயல்களாலும் அடைவதே மெய்ப் புகழ். இத்தகைய உண்மைப் புகழ்பெற்றவரை மட்டுமே ஜனத் தலைவர்களெனக் கூறுவது பொருத்தம்.

ஆனால் உண்மையான தலைவர்களின் பெயர்கள் வெளிவருவதே இல்லை. அவர்கள் தங்களுக்கு இயற்கையாயுள்ள சீர்திருத்த வேலைகளைச் செய்துகொண்டே போகின்றார்கள். பண்டைக் காலத்தில் பலர் கல்வியிற் பெரியராய், பற்பல நூற்களை இயற்றியும், பரோபகாரச் செயல்கள் பல செய்தும், சமுதாய முன்னேற்ற நோக்கத்துடன் ஊழியம் புரிந்தும், மக்கட்கு உண்மையாகவே பாடுபட்டு பொது ஜன ஊழியமே தமது ஜீவியத்தின் லட்சியமெனக்கருதி நடந்து வந்துள்ளார்கள். இவற்றால் இவர்களுக்கு மெய்ப்புகழ் உண்டாகி இவர்கள் பெயர்கள் என்றுமழியாமல் நிலைபெற்றிருக்கின்றன. ஆனால் தற்காலமோ ஒருவர் தம்மிடத்தில் உண்மைப் புகழ்ச்சிக்குரிய காரியம் சிறிதும் இல்லாவிடினும் அதனை உள்ளார் போல நடித்துப் பிறரை மயக்கி அவரது நன்மதிப்பைப் பெற முயலுகின்றனர்.

எத்தனையோ பேர்வழிகள் தங்களை ஆசார சீர்திருத்தக் தலைவர்கள் என்று எண்ணி இறுமாந்து போயிருக்கிறார்கள். ஜாதி வித்தியாசத்தைத் தாங்கள்தான் ஒழிக்க முற்பட்டவர்கள் என்று மகிழ்ச்சியடைந்து உள்ளம் பூரிக்கிறார்கள். சிலர் தங்களிடம் சுதேசப்பற்று சிறிதும் இல்லாமலிருந்தும், பரோபகாரம் அணுவளவும் இல்லாதிருந்தும், பலர் தங்களை மதித்துக்கொண்டாட வேண்டுமென்றும்; பலரிடம் எளிதில் பணம் கவர்ந்து சுயநலமும், சுயசௌக்கியமும் அடைய வேண்டுமென்றும் கருதி தேசீய உடைகளை அணிந்தும், மேடைகளில் உண்மைத் தேச பக்தர்களைப்போல் ஆவேசங்காட்டிப் பேசியும், பாமர ஜனங்களுக்குப் பசப்பு வார்த்தைகள் கூறி பாராளுமன்ற சபையில் புகுந்தும், மெய்யாகவே உடல், பொருள், ஆவி மூன்றையும் தேச நன்மைக்குத் தத்தம் செய்தவர்களைப்போன்று பெரு நாடகம் நடாத்தி, பத்திரிகைகளிலும், துண்டுப் பிரசுரங்களிலும் தங்கள் போலிச் செயல்களை எழுதி வெளியிட்டுத் தலை நிமிர்ந்து தற்பெருமை கொண்டு திரிகின்றனர். சிலர் தலை சுழல மதுபானம் அருந்திக் கண் சிவந்து கூத்தாடுவோராயிருந்தும் மகாதரும சீலர்களைப்போல் மேடைமேல் ஏறி மதுவிலக்கைப்பற்றி ஆத்திரத்தோடு பேசி அட்டஹாசம் செய்து பொது ஜனங்களுக்குத் தாம் மகா உத்தமர்களெனக் காட்டிக் கொள்ளுகிறார்கள். இன்னும் எழுத்தின் பேதங்களைக்கூட உணராத பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்தியும், தம்மைக் கட்டுரைக் களஞ்சியமென்றும் சொற்பொழிவில் சோனாமாரி என்றும் சொல்லிக் கொள்வதுடன் தம்மைப் பெரும் புலவர்களெனப் பத்திரிகைகள் வாயிலாகவும் பணங்கொடுத்து வெளியிட்டுக் கொள்ளுகின்றனர்.

நிற்க, தற்பொழுது ஓர் நவீன டம்பாச்சாரித்தனம் படைத்த தேசீய வாதிகள் என்னுமோர் கூட்டம்பக்தர்கள் வெளிக்கிளம்பி நாட்டிற்கு நாசத்தை விளைவிக்கத் தலைப்பட்டுள்ளார்கள். தேசியமென்னும்பதத்திற்கேற்பட்ட பொருளை நன்குணரச் சக்தியற்றவர்களாகிய இக்கூட்டத்தினர் தேசியஊழியமென்பதை ஓர் விளையாட்டுக் காரியமாகவே கருதி தேசீய ஊழியர்களென்ற புனை நாமத்தை தைரியமுடன் கைக்கொண்டு மக்களை ஏமாற்ற முயற்சிக்கின்றனர். உண்மைத் தேசாபிமானமே தேசீய ஊழியத்தின் அடிப்படையென்பதை இவர்கள் அடியோடு மறந்து விட்டார்கள்.

தேசியத்தின் பெயரால் தாம் செய்யும் ஈனச் செயல்கள் தம்மை நாசப்படுத்துவதுமன்றி பல கோடிக்கணக்கான மக்களையும் வழி தப்பி நடக்கும் நிலைமைக்குக் கொண்டுபோய்விடுமென்பதையும் இவர்கள் அறவே மறந்துவிட்டார்கள். இவர்களிடம் அந்தக் காரணமென்பது சற்றேனும் கிடையாது. எவர் கண்ணில் மண்ணிட்டாயினும் தாம் வயிறு வளர்க்க வேண்டுமென்ற மூட நோக்கத்தைத் தவிர இவர்களுக்கு வேறு நோக்கமில்லை. எவ்விதத்திலும் மற்றவர்கள் அபிவிருத்தியடைவதைக் கண்ணால் காணச் சகிக்கமுடியாத போலித் தலைவர்கள் ஜன சமூகத்திற்கே ஓர் பெரும் பாரமாகத் தோன்றுகின்றனர்.

தம்மைச் சீர்திருத்தஞ் செய்துகொண்டு தம் ஜீவியத்தைச் சுகமே கழிக்கச்சக்தியற்ற இவர்கள் பிறருக்குப் புத்திகூறத் துணிவது மிகவும் கேவலமான காரியமென்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவார்கள். இவை எல்லாம் அறிஞர் வெறுக்கத்தக்க இழிசெயல்களாக இருப்பினும், மேற்கூறிய வகுப்பினர் இவற்றிற்குச் சிறிதும் நாணுவதில்லை. இவற்றை விட்டுப் பயனுடைய காரியங்களைச் செய்யும்படி பிறர் கூறினும் இவர்கள் கேட்பதுமில்லை.

ஆகவே இத்தகைய பேர்வழிகளை நல்வழிப்படுத்தி நாட்டிற்குக் கேடு நேரிடாவண்ணம் பாதுகாக்கும் பொறுப்பு மக்களின் பொது நலத்திற்காக உழைக்கும் நண்பர்களையே சேர்ந்தது. இவர்கள் தாமாக நாசமடைவது வரை பொறுத்திருப்பது விசேட புத்தியன்று. இவர்களால் சமூகத்திற்கும், நாட்டிற்கும் நிகழ்த்தப்படும் துரோகச் செயல்களைக்காணும் பொழுதெல்லாம் அவைகளை கண்டித்து சீர்ப்படுத்த முயலுதல் வேண்டும்.

மக்களை ஏமாற்றி, நாட்டை வஞ்சகஞ்செய்து, தரித்திரத்தில் வருந்தும் மக்களின் காசைப்பறித்து, அவர்மனதையும் கவர்ந்து, பஞ்சமாபாதகர்களைப் போல் ஆடித்திரியும் போலித் தலைவர்களிடமிருந்து பொது ஜனங்கள் விலகி நடந்து கொள்ளவேண்டுமென்பதே எமது அவா.

பாரதி மண்டபத் திறப்பு விழா

இலங்கைப் பிரதிநிதிகளின் விஜயம்

எட்டையாபுரம், அக். 11

இங்கு இரு வருடங்களுக்குமுன் பாரதி ஞாபகார்த்த மண்டபத்திற்கு அஸ்திவாரக் கல் நாட்டிய மேற்கு வங்க கவர்னர் ராஜகோபாலாச்சாரியாரே, அக்டோபர் 13-ம் உ யன்று இங்கு நடைபெறும் பாரதி மண்டபத் திறப்பு விழாவையும் ஆரம்பித்து வைக்கிறார். சென்னை பிரதமர் ராமசாமி ரெட்டியாரும் மற்ற மந்திரிகளும் ஏராளமாக காங்கிரஸ் பிரமுகர்களும் விஜயம் செய்கிறார்கள்.

தமிழநாடு பெற்ற தவப்புதல்வரும், புகழ்பெற்ற தமிழ்க் கவிஞரும், தேச பக்த சிரேஷ்டரும், தத்துவ ஞானியும் ஜீவன் முக்தருமான காலஞ்சென்ற கவி சுப்பிரமணிய பாரதியாருக்கு அவர் பிறந்த இடமாகிய எட்டையா புரத்தில் ஓர் ஞாபகார்த்தத்தை நிலைநிறுத்தவே இம்மண்டபம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பொது ஜன பண உதவியால் பதினையாயிரம் ரூபாய் செலவில் இம்மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. இதில் ஒரு நூல் நிலையம், வாசகசாலை, சித்திரக் கூடம் ஆகியவை அமைக்கப்படும்.

விழாவுக்கு விஜயம் செய்கிறவர்களையும் பாரதியாரின் பக்தர்களையும் வரவேற்க வசதிகளும் மும்முரமான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள பல பாகங்களிலிருந்தும் இவ் விழாவிற்கு ஏராளமான ஜனங்கள் வருகிறார்கள்.

(அ-பிரஸ்)

சிறுபான்மையோருக்குப் பாதுகாப்பு

ஆயிரம்சிவில்ராணுவஅதிகாரிகள் கூட்டம்

ஜனாப் ஜின்னா பிரசங்கம்

நவம்பர் 15-ம் தேதிக்குள் ஜன மாற்றத்தை முடிக்க துரித ஏற்பாடு

கராச்சி, அக். 11

சிவில்அதிகாரிகளும் ராணுவ அதிகாரிகளும் விமானப்படை அதிகாரிகளுமாக ஆயிரம் பேர்கள் கூடியிருந்த கூட்டத்தில் பாக்கிஸ்தான் கவர்னர் ஜெனரல் காயிதே ஆஸாம்முஹம்மது அலி ஜின்னா பேசியபோது பின்வருமாறு தெரிவித்தார்:-

நாம் புதியதோர் அரசாங்கத்தை சிருஷ்டித்திருக்கிறோம். அதை உருவாக்குவதில் நாம் தோல்வியடைந்துவிடலாகாது. சிறுபான்மையோர் பிரச்னை எனது மனதில்கலக்கத்தை உண்டுபண்ணிக் கொண்டிருக்கிறது. அவர்களை சரியாக நடத்தும் படி நான் அடிக்கடி சொல்லிவருகிறேன். அவர்களை விரட்டிவிடவேண்டுமென்று கருதலாகாது. திடீரென நெருக்கடி ஏற்பட்டதால் நாம் அவர்களை எவ்விதம் நடத்துகிறோம் என்பதற்கு அவர்கள் நமக்கு சந்தர்ப்பமளிக்காமலும் ஒத்துழைக்காமலும் இருந்துவிட்டார்கள்.

பழைய குற்றங்களுக்காக இப்பொழுது இந்தியாவில் நம் முஸ்லிம் சகோதரர்கள் பெரும் கஷ்டத்திற்குட்பட்டிருக்கிறார்கள். கிழக்குப் பஞ்சாப்பிலிருந்து முஸ்லிம்களை அப்புறப்படுத்துவதோடு திருப்தியடையாது இந்தியாவின் இதர பாகங்களிலுள்ள முஸ்லிம்களையும் விரட்டுவதற்கு அங்கு சிலர் முயற்சி செய்கிறார்கள்' இந்தியாவில் முஸ்லிம்கள் நிம்மதியாக வாழ முடியாதிருக்கிறது. நாம் அவர்களைக் கைவிட்டுவிட்டோமென்று கருதுகிறார்கள்.

இந்தியாபிரிக்கப்படும்போது இரு டொமினியன்களும் தத்தம் சிறுபான்மை வகுப்பினருக்குப் போதிய பாதுகாப்பளிக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆதலால் சிறுபான்மையோர் தத்தம் டொமினியன் அரசாங்கத்திடம் விசுவாசமாக இருக்கும் வரை எதற்கும் அஞ்சத் தேவையில்லை. இந்திய சர்க்கார் இக்கொள்கையைக் கடைபிடித்து முஸ்லிம்கள் துன்புறுத்தப்படுவதை நிறுத்தமுன் வருவார்கள் என்று நம்புகிறேன். ஆனால் இந்தியாவில் முஸ்லிம்கள் மேலும் நசுக்கப்படுவார்களாகில் இரு அரசாங்கங்களுக்கும் நாசமே விளையும்.

இந்திய முஸ்லிம்களுக்கு நான் சொல்லும் புத்திமதி என்னவென்றால், அவர்கள் தங்களது இந்திய டொமினியன் அரசாங்கத்திடம் விசுவாசமாக நடந்துகொள்ள வேண்டும் என்பதே. அதேசமயம் அவர்கள் தங்களை சரியான பாதையில் நடத்திச் செல்லும் தலைவர்களின் கீழ் கட்டுப்பாடாக இருந்து தங்கள் நிலைமையைப் பலப்படுத்திக்கொள்ள வேண்டும். அதேபோன்று இங்குள்ள சிறுபான்மையோரும் விசுவாசமாக இருக்கவேண்டும்.

செயிப்பூர் சமஸ்தானம்

பாக்கிஸ்தான் சர்க்கார் அந்நியநாட்டிலாகா அறிவிப்பது:- சிந்துவின் கிழக்கு எல்லையிலுள்ள செயிப்பூர் சமஸ்தானம் பாகிஸ்தானில் சேர்ந்துவிட்டது. முஸ்லிம் சமஸ்தானாதிபதியுள்ள இந்த சமஸ்தானத்தின் ஜனத்தொகை மூன்று லட்சம். விஸ்தீரணம் 6050 சதுர மைல்.

கிழக்கு வங்காளம்

கல்கத்தா, அக். 11

கிழக்கு வங்காளத்திலிருந்து அகதிகள் மேற்கு வங்காளத்திற்கு வருவதை மேற்கு வங்க சர்க்கார் விரும்பவில்லையென்றும், ஆனால் அவ்விதம் வரும் அகதிகளை பாதுகாக்க சர்க்கார் கடமைப்பட்டிருக்கிறதென்றும் மேற்கு வங்கப் பிரதமர் டாக்டர் பி. சி. கோஷ் அறிவித்தார்.

ஆஸ்திரேலியா உதவி

புதுடில்லி, அக். 11

ஆஸதிரேலியா ஐரோப்பா கமிஷனர் சர் இவான் மாக்கே பின்வருமாறு தெரிவித்தார்:-

இந்தியாவுக்கும் பாக்கிஸ்தானுக்கும் இனாமாக 20 லட்சப் அவுன்ஸ் காலராத் தடை மருந்து அனுப்ப ஆஸதிரேலிய சர்க்கார் தீர்மானித்திருக்கிறார்கள். காலரா பரவுமென்ற பீதி வேண்டியதில்லை. லேடி மவுண்ட் பேட்டன் மூலமாக ஆஸதிரேலியா செஞ்சிலுவைச் சங்கத்தார் உதவி செய்ய முன்வருவதாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தியாவுக்கு மேலும் கோதுமை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்ய ஆஸதிரேலிய சர்க்கார் ஆவலுடையவர்களாக இருக்கிறார்கள்.

லேடி மவுண்ட் பேட்டன் கிழக்குப் பஞ்சாப்பில் சுற்றுப் பிரயாணம் செய்தார். மேற்குப் பஞ்சாப்பிலிருந்து சமுத்திரம் போல வரும் அகதிகளை அவர் பார்வையிட்டார். அவர்கள் தங்கள் துயரங்களைப்பற்றி லேடி மவுண்ட் பேட்டனிடம் முறையிட்டார்கள்.

நவம்பர் 15 க்குள் ஜன மாற்றம் முடிவு

புதுடில்லி, அக். 10

நவம்பர் 15-ம் தேதிக்குள் மேற்கு கிழக்குப் பஞ்சாப் மாகாணங்களின் அகதிகள் போக்கு வரவை இரு டொமினியன்களும் முடித்து விடவேண்டுமென்றும் இதற்குப் பஞ்சாப்பிலுள்ள அதிகாரிகள் துரிதமான முயற்சி செய்ய வேண்டுமென்றும் இந்தியா மந்திரி சபை அவசரக் கமிட்டி தீர்மானித்தது.

இந்திய மந்திரி சபை அவசரக் கமிட்டி கலைக்கப்பட்ட போதிலும் அது நிர்மாணித்த கஷ்ட நிவாரண வேலைகள் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும்.

இந்தியா கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் நாளை புறப்பட்டு சிம்லாவிலும் கிழக்குப் பஞ்சாப்பிலுள்ள லாகூர் ஜில்லாவிலும் 6 தினங்கள் சுற்றுப் பிரயாணஞ் செய்து திரும்புவார்.

கிழக்கு மேற்குப் பஞ்சாப் மாகாணங்களிலும், டிலலியிலும் 3000 பேர்களுக்கு காலரா நோய் கண்டதாக கணக்கிடப்பட்டிருக்கிறது.

பாக்கிஸ்தானிலுள்ள தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு பிறையுள்ள 'பச்சை பேட்ஜ்' அணிந்து கொள்ளும்படி கொடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கின்றனர்.

கிழக்கு வங்காளத்தின் எல்லைப்புற ஜாதிகளான 3 லட்சம் பேர்கள் பாக்கிஸ்தானில் சேர முடியாதென்று எதிர்த்து வருகிறார்கள். இவர்கள் மூன்று தலைவர்களுக் குட்பட்ட சிட்டகாங் மலைவாசிகள். பௌத்த மதத்தைச் சேர்ந்தவர்கள். இத பிரதேசங்களில் கிழக்கு வங்க சர்க்கார் ஆயிரம்பலுஜிஸதான் வாசிகளைக் கொண்டுபோய் குடியேற்றியிருக்கிறார்கள்.

பாக்கிஸ்தானில் எந்த இடத்திலும் அமைதியாக வந்து வாழும்படி இப்பி பக்கிரிக்கு டாக்கிஸ்தான் சர்க்கார் அனுமதி அளித்திருக்கிறார்கள்.

லார்டு மவுண்ட் பேட்டன் எலிஸபெத் இளவரசி கலியாணத்திற்கு லண்டன் போகும் போது லார்டு இஸ்மே அவருக்குப் பதில் தற்காலிக இந்தியா கவர்னர் ஜெனரல பதவி வகிப்பாரென்று தெரிகிறது.

27 வருஷ காலமாக தேசப் பிரஷ்ட வாழ்க்கை நடத்திய இக்பால் ஷாய்டாய் அக்டோபர் 12-ம் தேதியன்று கராச்சிக்கு வருகிறார்.

லாகூருக்கு தென் கிழக்கே பாக்கிஸ்தான் நகரான கசூரில் ஆயுதம் தாங்கிய சீக்கியருக்கும் பாக்கிஸ்தான் போலிசுக்கும் மூன்றரை மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதாக மேற்கு பஞ்சாப் சர்க்கார் அறிக்கை கூறுகிறது. 60 சீக்கியர் துப்பாக்கிகளுடன் முஸ்லிம் கிராம வாசிகளைத் தாக்கினார்கள். போலிசார் அவர்களில் பலரைக் கொன்றனர். மேற்குப் பஞ்சாப்பில் சீக்கியர்களையும் ஹிந்துக்களையும் முஸ்லிம்கள் மிராவலி என்னுமிடத்தில் தாக்கினர்.

குவாலியரிலிருந்து போபாலுக்கு அகதிகளின் சாமான்களை ஏற்றிச் சென்ற ரயிலில் தீப்பிடித்தது. அந்த வண்டியை அப்புறப்படுத்தி சோதனை செய்ததில் அதில் துப்பாக்கிகள் வெடிகுண்டுகள் இருந்தன.

காந்திஜி பிரார்த்தனை வர்ணனை

லண்டன், அக். 10

காந்திஜி பிரார்த்தனை நடத்துவதை வர்ணித்து 'டெய்லி மிரர்' பத்திரிகையில் தூர கிழக்குப் பிரதேசத்தில் பிரயாணம் செய்து திரும்பிய ஒரு நிருபர் எழுதியிருக்கிறார்.

ஆஸப் அலி அறிக்கை

நியூயார்க், அக். 10

இந்திய ஸ்தானாதிபதி ஆஸப் அலி பின்வருமாறு தெரிவித்தார்:- இந்தியாவில் ஒரு வருட காலமாக வளர்ந்துவந்த பாசிசக் கொள்கையின் பயனாகவே இந்தியாவிலும் பாக்கிஸ்தானிலும் கலகமேற்பட்டது. அதோடு பிரிவினையால் ஏற்பட்ட வகுப்புத் துவேஷமும் காரணமாகும். இந்தியாவின் உணவு நெருக்கடியைச் சமாளிக்க 70 000 டன் தேவைப்படுகிறதென்று அமெரிக்க சர்க்காருக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவுக்கு பணிக்கர் வேண்டுகோள்

இந்தியா பிரதிநிதி கோஷடியைச் சேர்ந்தவரும் பீகானீர் சமஸ்தான பிரதம மந்திரியுமான டாக்டர் கே எம். பணிக்கர் இன்று ஆஸதிரேலியாவை நோக்கி ரேடியோமூலம் பேசிய போது பின்வருமாறு தெரிவித்தார்:-

ஆசியா மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டும். தாமதம் செய்யப்படின் அபாயம் உண்டாகும். பாதுகாப்புக் கவுன்ஸிலில் ஆஸதிரேலியா ஸதானம் காலியானதால் ஆசியாவின் ஒரு பிரதிநிதி அதில் இருக்கவேண்டுமென்றே இந்தியா அபேட்சிக்கின்றது.

பூரண மதுவிலக்கு இல்லையேல் ஓய்வில்லை

நிர்மாண வேலைகள் நடைபெறுகின்றனவா?

மதுவிலக்கு மந்திரிக்கு மகாத்மா கடிதம்

சென்னை, அக். 10

அக்டோபர் முதல் தேதியிலிருந்து மேலும் 8 ஜில்லாக்களில் மதுவிலக்கு கொண்டுவருவதுபற்றி ஓர் செய்தி அனுப்புமாறு மதுவிலக்கு மந்திரி ஸ்ரீ டேனியல் தாமஸை மகாத்மா காந்திக்கு எழுதிய கடிதத்திற்கு காந்திஜி அனுப்பியுள்ள பதில் வருமாறு:

அன்புள்ள டேனியல்!

தாங்கள் மேலும் 8 ஜில்லாக்களில் மதுவிலக்கு கொண்டுவருவது ரொம்பவும் நல்லதுமாகாணம் முழுதும் மதுவிலக்கு வருகிறவரை ஓய்வே இருக்கக்கூடாது 'ஹரிஜனில்' குறிப்பிடப்பட்டுள்ளபடி நிர்மாண வேலைகளையும் நீங்கள் பின்பற்றி வருகிறீர்களா?

தங்களன்புள்ள,
எம். கே. காந்தி.

டாலரும் உணவும்

லண்டன், அக். 9

இந்தியா பாக்கிஸதான் தென்னமெரிக்காவிலிருந்து தான் உணவுப் பொருள் வாங்க முடியுமென்றும் அதற்கு டாலர் வசதியளிக்க பிரிட்டன் தென் அமெரிக்க நாடுகளுடன் ஸ்டெர்லிங் சம்பந்தமான ஒப்பந்தம் செய்துகொள்ள வேண்டுமென்றும் இங்கு அபிப்பிராயம் நிலவுகிறது.

பாக்கிஸதான் நிலைபெருதா?

"ட்ரிபூப்" என்ற பத்திரிகை எழுதுவதாவது:- இப்பொழுது இருந்துவரும் நிலைமையைக் கவனித்தால் பாக்கிஸதான் நிலைபெற்றிருக்காதென்றே தெரிகிறது. சில மாதங்களுக்குள் அல்லது அதிகமாக இரண்டு வருடங்களுக்குள் பாக்கிஸதான் மறைந்துவிடும். இந்தியாவில் ஹிந்து பாசிசத்துடன் பண்டித நேரு போராடிவருகிறார். ஜனாப் ஜின்னாவின் முஸ்லிம் லீக்கின் வகுப்புத்துவேஷத்தால் ஹிந்து பாசிசம் தலை தூக்கியிருக்கிறது.

இந்தியாவின் பிரமாண்டமான விமான நிலையத் தொடர்

அமெரிக்கா, ரஷியாவுக்கடுத்தாற்போல பெரியதோர் திட்டம்

ஆசியாவிலேயே சிறந்த 31 விமான நிலையங்கள் 2 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படுகின்றன

புதுடில்லி, அக். 11

உலகிலேயே அமெரிக்காவுக்கும் ரஷியாவுக்கும் அடுத்தாற்போல மூன்றாவதாக இந்தியாவில் வலைப் பின்னல் போன்ற பெரியதோர் விமான நிலையங்களின் தொடர் அமைக்கப்படத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. இரண்டு கோடி செலவு செய்து இத்திட்டத்தை ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்றி வைக்க ஏற்பாடாகி வருகிறது.

இத்திட்டத்தின்படி இந்தியாவெங்கும் நவீன முறையில் 31 விமான நிலையங்கள் சகல வசதிகளையுமுடையதாக அபிவிருத்தியுடன் நிறுவப்படும்.

பம்பாய், கல்கத்தா, டில்லி, சென்னை ஆகிய இடங்களில் உள்ள விமான நிலையங்கள் விஸ்தரிக்கப்படும். அவை ஆசியாவிலேயே மிக நவீனமான பெரிய நிலையங்களாக அமைக்கப்படும். இந்நிலையங்களில் சர்வதேச விமானப் பாதைகளில் பறக்கும் ஐரோப்பிய அமெரிக்க விமான சர்வீஸ்களின் விமானங்கள் தங்கிச் செல்ல வசதிகள் செய்யப்படும். இந்நிலையங்களிலிருந்து உள்நாட்டு விமானப் போக்குவரத்து இணைப்பு சர்வீஸ்களும் திறமையாக நிறுவப்படும். இந்தியாவின் உள்நாட்டு சர்வீஸகளுக்காக அலகாபாத், லக்னோ, நாக்பூர், கான்பூர், விசாகப்பட்டினம், அகமதாபாத் ஆகிய ஆறு இடங்களின் விமான நிலையங்களை பெரிய நிலையங்களாக அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

இவைதவிர யுத்தகாலத்தில் நிறுவப்பட்ட 13 ராணுவ விமான நிலையங்களும் மற்றும் 8 விமான நிலையங்களும் சீர்திருத்தப்பட்டு புதுப்பிக்கப்படும்.

135000 ராத்தல் எடையுள்ள ராட்சச விமானங்கள் வந்து தங்கிச்செல்ல வசதியாக உலகில் நிலையங்கள் யாவற்றிலும் மிக்க வலிமையுள்ள இரு நிலையங்களாக பம்பாய் சான்டா குருஸ் நிலையமும், கல்கத்தா டம்டம் நிலையமும் அமைக்கப்படும். முதலாவது இந்தியாவின் மேற்குப் பகுதியிலுள்ள சான்டா குருஸ் நிலையத்தில் வேலை நடைபெறும். பிறகு இந்தியாவின் கிழக்குப்பகுதியிலுள்ள டம்டம் நிலைய வேலைகள நடைபெறும். சான்டா குருஸில் இந்த வாரமே வேலை நடைபெற்று முடிவுறுமாதலால் இனி சாவூதி அரேபியாவைச் சேர்ந்த தஹ்ரான் நகரிலிருந்து பம்பாய்க்கு நேரடியாக விமானம் வந்து தங்கிச் செல்லும்.

இந்திய சர்க்காரின் யுத்த பிற்கால புனருத்தாரணத் திட்டப்படி பொதுமராமத்து இலாக்காவின் சிவில் விமானப் பகுதியால் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. 1947-வது வருடம் டிசம்பர் மாதம் இத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

வியட்நாம் மீது பிரஞ்சு யுத்தம்

இரு நகரங்கள் பிடிபட்டன

வியட்நாம் நிதி மந்திரி கைதியானாரா?

ஹானோய், அக். 10

இந்தோ-சைனா பிரஞ்சு ராணுவ அறிக்கை கூறுவதாவது:-

இங்கிருந்து 25 மைல் தூரத்தில் செவ்வாற்றங்கரையிலுள்ள சன்டே என்ற ஊரை பிரஞ்சுத் துருப்புகள் கைப்பற்றிவிட்டன. அக்டோபர் 7-ம் தேதி துருப்புகள் அங்கு புறப்பட்டுச் சென்றன. வியட்நாமியர்கள் பலர் கொல்லப்பட்டனர். இந் நகரம் மாகாணத்தின் முக்கிய தலைநகராகும். சயாம் எல்லைப்புறத்தும் மற்றும் யுத்தங்கள் நடைபெறுகின்றன. கோவோபின் நகரும் பிடிபட்டது.

ஹானோயிலிருந்தும் கோவோவிலிருந்தும் புறப்பட்டுச் சென்ற பிரஞ்சுத் துருப்புகள் இந் நகரங்களையும் கைப்பற்றிய பின் ஒன்று சேர்ந்து கொண்டன.

யுத்தத்தின் முதல் கட்டம் முடிந்தது. ஹானோய் - சைகோன் விமானப் போக்குவரத்து மீண்டும் ஆரம்பமாய் விட்டது.

வியட்நாம் குடியரசு சர்க்காரின் நிதி மந்திரி வான் ஹீன் கைது செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது; செய்தி ஊர்ஜிதமாகவில்லை. வியட்நாம் சர்க்கார் சிறைப்படுத்தியிருந்த 100 பேர்களை பிரஞ்சுத் துருப்புகள் விடுவித்தன. பாரசூட் விமானிகள் இறங்கி ரஸ்தாக்களைக் கைப்பற்றினர்.

பிரஞ்சு அதிகாரிகளைச் சந்தித்து இந்தோ-சைனாவின் அரசியல் நிலைபற்றி விவாதிக்க மாஜி அன்னாம் மன்னர் பாவோடாய் கூடிய சீக்கிரம் புறப்பட்டுச் செல்வார். இச் சந்திப்பு கப்பலில் கடலில் நடைபெறும்.

எதிர்க் கட்சித் தலைவர் கொலை

சைகோன், அக். 11

வியட்நாம் குடியரசுத்தலைவர் டாக்டர் ஹோ சி மின்னை எதிர்க்கும் தேசீய ஐக்கிய முன்னணி கட்சியான கமியூனிஸ்ட் எதிர்ப்புக் கட்சித் தலைவர் நூபன் வான்ஸாம் நேற்றிரவு இங்கிருந்து 2 மைல் தூரத்திலுள்ள சோலோன் என்னுமிடத்திலே கொலை செய்யப்பட்டார். அவருடன் பஸ்ஸில் பிரயாணம் செய்த ஒருவன் அவரை சுட்டுக் கொன்றான்; சுட்டவன் தப்பியோடிவிட்டான்.

பொம்மை சர்க்கார் தலைவர் கொலை

ஹான்பீரில் பிரஞ்சு சர்க்கார் நிறுவிய பொம்மை அரசாங்கத் தலைவர் டாக்டர் தருவங்தின் திரிமீது நேற்று வெடிகுண்டு வீசப்பட்டது. காயமடைந்த அவர் இன்று காலை மரணமானார்.

இக்கொலைகளிலிருந்து வியட்நாம் குடியரசைக் காப்பாற்ற தங்களுக்குள்ளே இருக்கும் துரோகிகளை ஒழித்துக் கட்ட ஒரு சதிக்கூட்டம் இருந்து வருவதாகத்தெரிகிறது. (ராய்ட்டர்)

சென்னையில் ராஜாஜி

நகரசபை வரவேற்பு

சென்னை, அக். 11

"வட இந்தியாவிலிருந்து திரும்பி வந்தபிறகு அரசியல் சூழ்ப்பத்தில் நான் மீண்டும் பிரவேசிக்கப் போவதில்லை. இனி நான் யோசனைகள் கூறி வழிகாட்டியாக மட்டுமே இருக்க உத்தேசித்துள்ளேன்" என்று இன்று மாலை சென்னை நகரசபை அளித்த வரவேற்புபசாரத்திற்கு பதிலளிக்கையில் மேற்கு வங்க கவர்னர் ராஜாஜி குறிப்பிட்டார்.

அரசியல் தலைவர்களை இனி அவர்களே பொறுக்கி எடுக்க வேண்டுமென்றும் ராஜாஜி வற்புறுத்தினார்.

ஒழுங்கு என்பதே அவர்கள் மந்திரமாக இருக்கவேண்டுமென்றும் ஒவ்வொருவனும் நிர்வாகத் திறமையை வளர்க்கப் பாடுபட வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவதாசி முறை ஒழிக

சென்னை சட்ட சபையில் மசோதா

ஸ்ரீமதி. அம்மண்ணராஜா பரிசீலனைக் கமிட்டித் தலைவி

சென்னை, அக். 10

நேற்று பிரதமர் சார்பில் டாக்டர் சுப்பராயன் தேவதாசிகள் ஒழிப்பு மசோதாவை சட்டசபையில் கொண்டு வந்து இதை செலக்ட் கமிட்டிக்கு விட வேண்டுமென்று கோரினார். இம்மசோதா பற்றிய பழைய விவரங்களை அவர் கொடுத்ததாவது:-

1922 லேயே இம்மசோதா அப்பொழுதிருந்த கௌன்ஸிலில் ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி ரெட்டியால் கொண்டு வரப்பட்டதென்றும் மந்திரிசபை அதிகாரத்தைவிட்டு போய்விட்டதால் நிறைவேற முடியவில்லை 1938ல் ஸ்ரீமதி அம்மண்ணராஜா சட்ட சபையில் கொண்டு வந்தார். அப்பொழுது செலக்ட்கமிட்டிக்கு அது விடப்பட்டது. இக் கமிட்டியின் அறிக்கை தயாராவதற்குள் மந்திரிசபை ராஜிநாமா செய்யப்பட்டு விட்டது. பின்னர் ஸ்ரீ பாஷ்யம் மந்திரியாக இருந்த பொழுது இதைக் கொண்டுவர முயற்சித்தார். ஆனால் அதற்குள் மந்திரிசபை மாறியது.

இத்தடவை இம்மசோதா சட்டமாகிவிடும் என்றே நினைக்கிறேன்.

ஸ்ரீ வி. ஐ. முனிசாமி பிள்ளை இம்மசோதாவை ஆதரித்துப் பேசினார்.

பின் கண்டவர்களடங்கிய செலக்ட் கமிட்டிக்கு விடுவதென முடிவு செய்யப்பட்டது. ஸ்ரீ சங்கர சுப்பிரமணிய முதலியார், ஸ்ரீ கே பாஷ்யம், காளேஸ்வரராவ், ஸ்ரீ பி நடேசன், ஸ்ரீ சஞ்சீவிரெட்டி, ரஸாகான், டாக்டர் சுப்பராயன், ஸ்ரீமதி ஸீதா மகாலக்ஷ்மி அம்மாள், ஸ்ரீமதி அம்மண்ண ராஜா, ஸ்ரீமதி குட்டியம்மாளு அம்மாள், ஸ்ரீ மதி லக்ஷ்மிபாரதி, ஸ்ரீமதி அம்மண்ண ராஜாவை இதன் தலைவராக சபாநாயகர் நியமித்தார்.

ஈரானில் இந்தியர் அவதி

துவேஷம் மூட்டி விடப்படுகிறது

புதுடில்லி, அக். 9

ஈரானில் இந்திய ஸதானிகராக நியமிக்கப்பட்டுள்ள ஸ்ரீ சையத் அலி ஜாஹிரை உடனே ஈரானுக்குப் புறப்பட்டுச் செல்லுமாறு இந்திய சர்க்கார் கூறியிருப்பதாகத் தெரிகிறது. அங்கு ஈரானியருக்கும் முஸ்லிமல்லாத இந்தியருக்குமிடையில் துவேஷம் ஆதரித்து வருவதாக பீதியளிக்கக்கூடிய செய்திகள் வந்திருப்பதே இதற்குக்காரணமென்று தெரிகிறது. அங்கு உள்ள முஸ்லிமல்லாத இந்தியருக்கு எதிராகக் கலகம்செய்யுமாறு ஈரானியரைத் தூண்டிவிடும்முறையில் அங்கு உள்ள பத்திரிகைகள் எழுதி வருவதாகவும் தங்களைக் காப்பாற்றுமாறு ஈரான் இந்தியர் இந்திய சர்க்காரைக் கேட்டுக் கொண்டிருப்பதாகவும் தெரிகிறது.

அங்கு வசிக்கும் இந்தியர்க்கு தக்க பாதுகாப்பு அளிக்குமாறு ஈரான் சர்க்காரை இந்தியசர்க்கார் அவசரமாகக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். ஈரானில் இந்த மாதக் கடைசியில் இந்திய ஸ்தானிகராலயம் ஸ்தாபிக்கப்படுமென்று தெரிகிறது.

பாட புத்தகங்களில் பாரதியார் பாடல்கள்

சேர்க்கும்படி சர்க்கார் யோசனை

சென்னை, அக். 10

5-வது வகுப்பிலிருந்து செக்கண்டரிஸ்கூல்ச்-வதுபாரம் வரை உபயோகிக்கப்படும் தமிழ்ப்பாட புத்தகங்களில்பாரதியார், ராமலிங்கம்பிள்ளை ஆகியோர்களின் பாடல்களைச் சேர்க்கும்படி சர்க்கார் பாடபுத்தக பிரசுரக்காரர்களுக்கு யோசனை கூறியிருக்கின்றனர்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

இலங்கை அரசியலில் ஏக குடும்ப ஆட்சி

ஜனநாயகத்திற்கு சவக் குழி!

இடதுசாரிகள் என்ன செய்யப் போகிறார்கள்?

இலங்கை கமியூனிஸட் கட்சியின் பத்திரிகையான "ஜனசக்திய" 10-10-47ல் பின்வருமாறு எழுதுகிறது.

இத்தேசத்து பெரும்பான்மையினரான பொது வாக்காளர்களால் தேர்தலில் புறக்கணிக்கப்பட்ட சேனநாயக்கா குடும்பசெல்வாக்கை மறுபடியும் உறுதிப்படுத்துவதற்காக, திரு. சேனநாயக்காவால் நிறுவிய அரசாங்கத்தின் உயர்தர பதவிகளெல்லாம் தம் குடும்பத்து உறவினர்களுக்கும் மிகவும் நெருங்கிய நண்பர்களுக்கும் வழங்கப் பட்டிருக்கிறது. பாதுகாப்பு அந்நிய நாட்டு விவகாரம் ஆகிய முக்கிய பொறுப்பை தன் கைக்கீழ் வைத்துக்கொண்ட பிரதம மந்திரி, உள்நாட்டு இலாகா மந்திரி பதவியை ஸர் ஒலிவர் குணதிலகாவுக்கும் போக்கிஷ மந்திரி பதவியை ஜே ஆர். ஜயவர்த்தனுவுக்கும் ஒப்புக் கொடுத்துவிட்டு தன் மைந்தனுக்கு, தான் சென்ற 17 வருடகாலமாக வகித்து வந்த விவசாய மந்திரிப் பதவியையும் வழங்கி மற்றபடி தன் கைத்தாளத்திற்கு சரியானபடி ஆடக்கூடியவர்களுக்கு மற்றும் மந்திரிபதவிகளையும் நல்கியிருக்கிறார். அந்தந்தப் பதவிகளுக்குரிய நிர்வாகத் திறமையும் அறிவும் இருக்கிறதாவென்றால் தலை தடவித்தான் பார்ககவேண்டும்

பெரிய கலாட்டாக்காரர்கள்

கடந்த தேர்தலின் போது இடதுசாரி அபேட்சகர்களை தோற்கடிப்பதற்கு யூ.என்.பிக்கு கலாட்டாகாரர்களைதேடிக்கொடுத்த பஸ் கொம்பனி (போக்குவரத்து சௌகரியத்தின்) எதிர்காலத்தை பெரிய கலாட்டாக்காரர்களான லயனல் கொத்தலாவலைக்கும் சைமன் அபயவிக்ரமாவுக்கும் ஒப்புக்கொடுத்திருப்பதைப்பற்றி பொது மக்கள் ஆச்சரியப்படுகிறார்கள்.

தம் விருப்பம் போன்று செய்யலாம்

சென்ற அரசாங்க சபையில் அங்கத்தவர்களுக்கு இருந்த விசேஷ உரிமைகள் கூட இல்லாத, இந்தப் பார்லிமெண்டில் திரு. சேனநாயக்காவுக்கு தம் உறவினர்களுடன் சேர்ந்து, இத்தேசத்தை தம் விருப்பம் போன்று ஆட்சி செய்ய முடிகிறதாய் இருக்கிறது.

அரசியலில் குடும்பச் செல்வாக்கு வேண்டாம்

இப்படியெல்லாம் இத்தேசத்தை ஒரு சில குடும்பத்தினர்களின் தேவைக்கு மட்டும் ஆட்சி செய்யப்படுவதானால், இத்தேசத்தில் ஜனநாயகமென்ன? மண்ணாங்கட்டியென்ன? எனவே சேனநாயக்கா குடும்பச் செல்வாக்கை இத்தேசத்து அரசியல் துறையிலே இருந்து ஒழித்துக் கட்ட பொது மக்கள் தயாராக வேண்டும்.

எதிர் தலைவர் இல்லாக் குறை

தேர்தல் முடிந்தபின் திரு.சேனநாயக்காவுக்கு கபினெட் மந்திரி சபையை நிறுவக்கூடிய போதிய அங்கத்தவர் தம் கட்சியில் இல்லாதிருந்தபடியால் யூ என். பிக்கு எதிராக போட்டியிட்ட சுயேச்சை அங்கத்தவர்களை தம் பக்கம் சேர்த்துக் கொள்ள முடியக்கூடியதாய் இருந்ததன் காரணம் என்ன? நிர்ப்பயமாக நடவடிக்கை எடுத்து சாதுரியமாக மந்திரி சபையை நிறுவக்கூடிய வேறு தலைவரோ ஒற்றுமையுள்ள வேறு கட்சியோ முன்வராததுதான்.

உதிரிகளின் கொள்கை

"பொதுமக்கள் எங்களை தேர்தலில் தெரிவு செய்தது ஐந்து வருடங்கள் பார்லிமெண்டில் இருந்து கொண்டு எல்லாவற்றிற்கும் எதிராக வாக்குக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கும அல்ல. நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதிகளின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமானால் இத்தேசத்திற்கு பொறுப்பாகவுள்ள அரசாங்கம் இருக்க வேண்டியதவசியம். உண்மையான நிரந்தரமான அரசாங்கத்தை நிறுவுவதற்காக முன்வருவோருக்கு நாம் உதவி செய்யத் தயாராய் இருக்கிறோம்" என்று சுபேச்சை அங்கத்தினர் சிலர் பகிரங்கமாகக் கூறியிருக்கின்றனர். இவர்கள் திரு சேனநாயகா பின் பந்தம் பிடித்து அலைவதற்குக் காரணம் மற்றத் தலைவர்களோ கட்சியோ இவர்களுக்குத் தகுதியான பதவியைக் கொடுக்க விரும்பாததுதான். ஆனபடியால் "சேனநாயக்காவை தோற்கடியுங்கள்" என்று கோஷிப்பவர்கள் வேறு சரியான-உசிதமான-மார்க்கத்தையாவது காட்ட வேண்டும்.

இடதுசாரியினர் செய்யப் போவதென்ன?

இடதுசாரி கட்சிகளுள் மாத்திரமல்ல. யூ. என். பிக்கு அடுத்தபடியாக பெரியது என். எம். பெரேராவின் சமசமாஜக் கட்சிதான். "ஆனபடியால் சேனநாயக்கா கட்சிக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டிய பெரும் பொறுப்பு சமசமாஜக் கட்சியின் மீதே இருக்கிறது" ஒரு புசல் நெல்லுக்கு பதினைந்து ரூபாய் வாங்கித் தருவோம் என்று விவசாயிகளுக்கு உறுதி கூறியும் பெரிய தோட்டம் துறவுகளை தேசியமயமாக்க உறுதி கூறியும் இத்தேச பூரண விடுதலைக்குப் போராடுவோம் என்றும் சமசமாஜக்கட்சியினர் பிரசாரம் செய்தார்கள். அந்த உறுதிமொழிகளையெல்லாம் அவர்கள் நிறைவேற்ற வேண்டும்.

பொறுப்பை உணரவேண்டும்

சேனநாயக்கா அரசாங்கம் இவையொன்றையும் செய்யாது. ஆனபடியால் அந்த அரசாங்கத்தை தோல்வியடையச் செய்துவிட்டு, நிர்வாகப் பொறுப்பை மற்றவர்களால் கைப்பற்றவிருக்கும் இச்சமயத்தில், சமசமாஜக்கட்சி பொறுப்பற்ற மாதிரி நடந்துகொள்ளுகிறது. சேனநாயக்கா அரசாங்கத்தை தோற்கடித்தது, வேறு அரசாங்கத்தை நிறுவ சமசமாஜி கட்சி உதவி செய்யும் என்று டாக்டர் என். எம் பெரேரா சொல்லுகிறார். "எனினும், எங்கள் கட்சி பார்லிமெண்ட் கட்சி மாத்திரமல்ல, அது புரட்சிவாதி கட்சியாகும். ஆனபடியால் எங்களுக்கு பார்லிமெண்டில்மெஜாரிடி பலம் கிடைக்கும் வரையில் நாம் மந்திரிப் பதவிகளை ஏற்க மாட்டோம்" என்று சொல்லுகிறார் என். எம், பெரேரா. "மாற்று அரசாங்கத்தை அமைக்க உதவி செய்து, அந்த அரசாங்கத்தை நிறுவியபின் அதற்கும்எதிர்க்கட்சியாய் இருப்போம்" என்று மேலும் கூறுகிறார்.

அர்த்தமற்ற தர்க்கம்

"அப்பொழுது திரு. சேனநாயக்கா எதிர்க்கட்சியில்இருப்பாரானால் என். எம். பெரேரா அவருடன் ஒத்துழைப்பார்." புரட்சிவாதிகள் கட்சி சேனநாயக்காவுக்கு எதிராகஅரசாங்கத்தை நிறுவிய பின்னும் அந்த அரசாங்கத்திற்கும் எதிராகஇருந்து சேனநாயக்காவுடன் சேர்ந்து போராடும் "புரட்சி"யைப் பற்றி எங்களுக்குத் தெரிவது சிரமம்தான்.

இடதுசாரிகள் மீதுள்ள பொறுப்பு

"சேனநாயக்காஅரசாங்கத்தை தோற்கடியுங்கள்"என்றுசொல்லும் கமியூனிஸ்ட்கட்சி அப்படி சொல்லுவதன் காரணம் திரு. சேனநாயக்காவுக்கு "துள்ளு மீசை" இருப்பதினால் அல்ல அவரினதும் அவருடைய கட்சியினதும் கொள்கைகளும் நடவடிக்கைகளும் இத்தேசத்தின் அழிவுக்கு ஆதாரமாய் இருப்பதினாலேதான். சேனநாயக்கா அரசாங்கம் பிரித்தானும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளுக்கு மறைமுகமாக கோள் மூட்டி தம் சுயலாபத்தை அடைவதினால் தான், இந்த நடவடிக்கை மூன்றாவது அகில உலக மகாயுத்தத்திற்கு பிரிட்டிஷ்-அமெரிக்க ஏகாதிபத்தியவாதிக்கு அனுகூலமாய் இருப்பதினால் தான். ஆனபடியால், அந்த அரசாங்கதை தொலைத்துவிட்டு, மாற்று அரசாங்கத்தை நிறுவுவதன் திட்டமான கொள்கைகளையும் நடவடிக்கைகளையும் குறித்து ஒரு சுமுகமான முடிவுக்கு வரவேண்டும்.

பொறுப்பேற்றுக் கொள்ளுவதன் அவசியம்

இதுதான் இப்போதுள்ள நிலைமையில் முக்கிய பிரச்னையாய் இருக்க வேண்டும். ஏனென்றால் அடுத்த ஐந்து வருடங்களுக்குள்ளே உளுத்துப்போய்க் கொண்டிருக்கும் சேனநாயக்கா குடும்பச் செல்வாக்கை மிதமிஞ்சுவதினின்றும் தடுத்துவிட வேண்டுமானால் இடது சாரிகளும் மற்றும் சீர்திருத்தவாதிகளும் அரசாங்கத்தில் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும் அதாவது புதிய அரசாங்கதை நிறுவுவதும், அதை நடாதடுச்செலுதற்கும் முன்வர வேண்டும். இப்படியான சூழ் நிலையை அனுசரித்து நடவடிக்கை யெடுக்காது விட்டால் சேனநாயக்காவின் சுயலாப் கொள்கை வேருன்றிவிடும். இப்படியாயின் எல்லா இடதுசாரிகளும் சீர்திருத்தவாதிகளும் இந்த மன்னிக்க முடியாத குற்றத்திற்கு பாத்திரமாவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

முக்கிய நடவடிக்கை

எனவே கண்டிப்பாக அரசாங்கத்தில் பங்குபற்ற வேண்டும். அதற்குள்ளே இருக்கும் சதிகளையும் குட்டுகளையும் அம்பலத்திற்கு கொண்டுவர வேண்டும். பொது மக்களின் உத்வேகத்தை நம் பக்கமாகத் திருப்ப வேண்டும். இத்துடன் தத்தம் தொகுதிகளுக்கு தொண்டு செய்ய வேண்டும். மக்களின் ஜீவாதார உரிமைகளுக்காகப் போராட வேண்டும். அப்பொழு சேனநாயக்கா அரசாங்கம் குப்புற விழுந்துவிடுவது நிச்சயம்.

பால் பண்ணை ஆளிடம் களவு

நாலு எதிரிகள் மீது குற்றத் தீர்ப்பு

கொழும்பு, அக். 11

பால் பண்ணை வேலையாளான சங்குங்க தேவர் என்பவரை வழிமறித்து அவரிடம் இருந்த ரூபா 90ஐயும் அவர் அணிந்திருந்த வேஷடியையும் கூட களவாடியதாகத் தொடரப்பட்டவழக்கில் எதிரிகளான எப். சாமாபிள்ளை, ஏ.வில்பர்ட் ஜே ஏ. பியதாச, கே. அல்பர்ட் சில்வா என்ற மாரகமை வாசிகள் நால்வரும் குற்றவாளிகள் எனத் தீர்ப்பளிக்கப்பட்டனர்.

கொழும்பு நகரில் இருந்து பிரஸதாப நபர் உடாமுல்லையில் உள்ள தமது பண்ணைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கும் போதே மேற்படி சம்பவம் நடைபெற்றது.

அக்டோபர் 17-ம் தேதியே இவ்வழக்கில் தண்டனை விதிக்கப்படும்.

210 புசல் சட்டவிரோத நெல்

குற்றவாளிக்கு ரூபா 1000 அபராதம்

திரிகோணமலை, அக். 11

திரிகோணமலைத் துறைமுகதில் ஒரு தோணியில் 210 புசல் நெல் கண்டு பிடிக்கப்பட்டது. சுங்கவரிச் சட்டத்தின் கீழ் குற்றவாளி மீது ரூபா 1000 அபராதம் விதிக்கப்பட்டது.

நெல்லுக் கடத்தியவருக்கு 50 ரூபாய் அபராதம்

சாவகச்சேரி, அக். 10

யாழ்ப்பாணம் வாசியாகிய ராஜபக்ஷ தர்மசேனு என்பவர் 32 படி நெல்லை உத்தரவு சீட்டின்றி கொண்டு சென்றார் என்று சாவகச்சேரி போலிஸ் பகுதியாரால் தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரி போலிஸ கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்ட பொழுது விசாரணை முடிவில் சாவகச்சேரி போலிஸ் நீதிபதி எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு எதிரியின் நெல்லு 32 படியையும் பறிமுதலாக்கி ஐம்பது ரூபாய் அபராதமும் விதித்தார். (ந-நி)

போலிஸ் கான்ஸ்டபிள் போல் நடித்த நபர்

9 மாத சிறைத்தண்டனை பெற்றார்

கொழும்பு, அக். 11

சொக்கலிங்க தேவர் என்பவர் ரப்பர் கமிஷனர் இலாகாவில் வேலைசெய்யும் ஒரு பியூனை வழிமறித்துஓர்போலிஸகான்ஸடபிள் போல் நடித்துச் சோதனையிட்டதாகத் தொடரப்பட்ட வழக்கில் எதிரிதான் குற்றவாளி என்பதை ஒப்புக் கொண்டார்.

அதன்பேரில் அவருக்கு 9 மாத கடுழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. அவருக்குத் துணை புரிந்த மற்றோர் நபருக்குச் சிறிது மூளைக்கோளாறு என்று கருதப்பட்டதால் அவர் அங்கொடை மூளைக் கோளாறு ஆஸபத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பசுவின் வயிற்றிலவதரித்த பன்றி ரூபம்

அச்சுவேலி, அக். 10

தோப்பு என்ற இடத்தில் இன்று காலை ஓர் பசு பன்றி ரூபமடைய கன்று ஒன்றை ஈன்றது.

இதன் முகம் பன்றியைப் போன்று நீண்டதாயும் சொண்டுகள் கூரானவையாயும் காணப்பட்டன. தலை உச்சியில் ஒரே ஒரு கண்மட்டும் உண்டு. ஆணோ பெண்ணோவென்பதை அறிய முடியாதிருக்கின்றது. தேகம் மனிதருடைய தேகம்போன்று மயிரின்றி தொளதொளவென்று காணப்பட்டது.

இது பிறந்து சில நிமிடங்களின் பின் இறந்து போனது.

மேற்படி கன்றுக் குட்டி நூதன சாலைக்கு அனுப்புவதற்காக எடுத்துச் செல்லப்பட்டது. (ந-நி)

வீட்டுள் புகுந்து காயம் விளைத்தார்கள்

சாவகச்சேரி, அக். 10

புளியம்பொக்கணை வாசிகளாகிய கனபதியார் பொன்னையாவும் சின்னக்குட்டி நல்லதம்பியும் அவ்வூர் சின்னப்பிள்ளையினுடைய வளவிற்குட் சென்று சின்னப்பிள்ளையை அடித்துப் படுகாயப்படுத்தியதாகத் தொடரப்பட்ட வழக்கு இன்று விசாரணைக் கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் சாவகச்சேரி போலிஸ் நீதிபதி சின்னக்குட்டி நல்லதம்பியை எச்சரிக்கை செய்து விடுதலையாக்கிப் பொன்னையா என்பவருக்கு மூன்று வருட நல்நடத்தைப் பிணையுடன் முறைப்பாடுகாரிக்கு ரூபாய் முப்பது கொடுக்கும்படிக்கும் தீர்ப்பளித்தார். (ந-நி)

கழுத்தில் சுருக்கிட்ட வயோதிபர்

6 மாத நன்னடத்தைப் பிணையில் விடுதலை

சாவகச்சேரி, அக். 10

கச்சாய் வாசியாகிய முருகர் கந்தர்(எழுபதுவயது) என்பவர் தற்கொலை செய்வதற்காகத் தனது கழுத்தில் சுருக்குப் போட்டார் என்று தொடரப்பட்ட வழக்கு விசாரணைக் கெடுக்கப்பட்டு விசாரணை முடிவில் சாவகச்சேரி போலிஸ் நீதிபதி எதிரியை 6 மாத நல்நடத்தைப் பிணையில் விட்டிருக்கிறார். (ந-நி)

பயமுறுத்திப் படுகாயப் படுத்தினார்கள்

சாவகச்சேரி, அக். 10

கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னப்பா சின்னத்தம்பியும் நுணாவில் வாசி நாகன் என்பவனும் கந்தையா முத்தையா என்பவனைப் பயமுறுத்திப் படுகாயங்கள் விளைவித்தார்கள். என்று தொடரப்பட்ட வழக்கு இன்று சாவகச்சேரி போலிஸ் கோர்ட்டில் விசாரணைக்கெடுக்கப்பட்டு முடிவில் நீதிபதி ஒவ்வொருவரையும் 3 வருட நல்நடத்தைப் பிணையில் விட்டு சின்னப்பா சின்னத்தம்பி என்பவருக்கு 40 ரூபாய் அபராதமும் விதித்தார். (ந-நி)

கட்டிட வேலைக்கு
வேண்டிய எல்லா
விதமான சாமான்களும்
குறைந்த விலையில்
கிடைக்கும் இடம்
செட்டிநாட்
கார்ப்பொரேஷன் லிமிடட்
116/118 கெய்சர் வீதி,
கொழும்பு.

கதம்பைக் கயிறு

கிந்தோட்டை கதம்பைக் கயிறுகளும் தும்பால் செய்யப்பட்ட சாமான்களும் நேரிலோ தபால் மூலமோ பெற்றுக்கொள்ளலாம் ஆர்டர்களுக்கு தேவையான சாமான்கள் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.
தேடா கயிறு, கம்பை, வடம், ஈக்கில்தடி, தும்புத்தடி, கயிற்றுப்பாய், காப்பற், கால்மிதி இவ்விடம் குறைந்த விலையில் வேண்டிய தினுசுகளில் பெற்றுக்கொள்ளலாம்.
இத்தோடு திறம் லங்கா பிராண்ட் வினுகரியும், கை பேக்ஸ்களும் கிடைக்கும்.
மொத்த வியாபாரிகளுக்கும் சில்லறை வியாபாரிகளுக்கும் விசேஷ சலுகை உண்டு
விலை விபரங்களுக்கு எழுதுங்கள்.

A. Abdul Kalyoom,
Coir Ropes
Manufacturer at Gintota
No 44, Wolfendahl Street,
Colombo.

ஏ. அப்துல் கையும்,
44, ஆதிருப்பள்ளித்தெரு,
கொழும்பு.
கயிற்றுத் தொழிற்சாலை,
கிந்தோட்டை.

அற்புதமானது! ஆனந்தமளிப்பது!!
மனதிற்கு பரவசமும் உல்லாசமும் ஊட்டுவது
இப்படியாக பாலர் முதல் பெரியோர்வரை ஏகோபித்து புகழ்வதெல்லாம்
மேனகா மார்க் லொசிஞ்சர்களே!
மேனகா மார்க் லொசிஞ்சர்கள் ஒவ்வொன்றிலும் தேகத்திற்கு வலிமை அளிக்க வல்லதும் இரத்த விருத்தியுண்டாக்குவதுமான குளுக்கோஸ் எனும் சத்து சேர்ந்திருக்கிறது அத்துடன் மனதிற்கு நல்மணமும், நற்சுவையும் கொடுக்கக்கூடிய பழரசச் சத்தும் சேர்ந்து இதற்கென்றே இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிபுணர்களைக்கொண்டு சாஸ்திரமுறைப்படி தயாரித்து யாவருக்கும் எளிதில் கிடைக்கக்கூடிய விதத்தில் சரசமான விலையில் டின்களில் அடைத்து விற்கப்படுகின்றது.
மேனகா மார்க் லொசிஞ்சர்
எல்லா முக்கியவியாபாரிகளிடமும் கிடைக்கும்
தயாரிப்பாளர்கள்:-
ராஜா இன்டஸ்ரியல் வேர்க்ஸ்,
71, புதிய சோனகத் தெரு, கொழும்பு.
Telegram: "SWEETS" Telephone: 2737
கீழ்க்காணும் வியாபாரிகளை நமது முக்கிய விநியோகஸ்தர்களாக நியமித்திருக்கிறோம்.
V. T. செல்லையா அன் கோ, குருநாகல்
K. முருகேசு அன் கோ, " "
மனோன்மணி ஸ்டோர், கேகாலை Kegalle.
W. E. M. பாக்ஷா சாகிப் அன் கோ, நாவலப்பிட்டி
N. B. அந்திரிஸ சில்வா அன் கோ, கம்பளை
M. சேகு அலி ராவுதர் அன் கோ, வத்துகாமம்
A. S. M. முகைதீன் அன் கோ, மாத்தளை
M. T. செல்லையா அன் கோ, கெக்கிராவ
K. சிவகுநாதப்பிள்ளை அன் சன்ஸ், யட்டியாந்தோட்டை
S. நாகமுத்து, ருவான்வெளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் கள்ள 'செக்'குகள் நடமாட்டம்

மோசடிக் கூட்டத்தைச் சேர்ந்த இருவர் கைது

மாஜி கைத்தொழில் மந்திரியைக் கடத்த முயன்றபோது பிடிபட்டனர்

கொழும்பு, அக். 13

"செக்கு" மோசடி செய்து திரியும் ஒரு கூட்டம் வாலிபர்கள் பழைய கைத்தொழில் வர்த்தக மந்திரியாகிய திரு. ராஜாஹோவா வித்தாரணையைக் கடத்திச் செல்ல முயற்சி செய்தபொழுது தந்திரமாக ஸி. ஐ. டி. போலிஸ் உதவி சுப்பிரிண்டாகிய திரு. ஜே. டபிள்யூ. எல். அட்டிகலை அக்கூட்டத்தினரில் இருவரைக் கைது செய்துள்ளார்.

பல நாட்களுக்கு முன்பு திரு ஹேவாவித்தாரண தம்முடைய ஐம்பது அல்லது அறுபது ஒற்றைகளைக்கொண்ட செக்குப் புஸ்தகத்தை யாரோ தமது கந்தோரிலிருந்து களவாடியுள்ளதாகபோலிஸுக்கு அறிவித்திருந்தார். போலிஸார் கள்ளக் கையொப்பம்போட்டு இச் செக்குகள் பாங்குக்கு மாற்றுவதற்கு வருமென்று எதிர் பார்த்திருந்தனர்.

இரண்டு மூன்று தினங்களுக்குமுன்பு, திரு. ஹேவாவித்தாரணையைக் கடத்திக்கொண்டு போய் இச்செக்கு ஒற்றைகளில் கையொப்பமிடுவிக்க யாரோ முயற்சிப்பதாக திரு. ஹேவாவித்தாரண அறிந்தார். உடனே இவ்விஷயத்தையும் போலிஸாருக்கு திரு. ஹேவாவித்தாரண அறிவித்தார்.

திரு. அகட்டிலை இம்மோசடிக்காரர்களைப் பிடிப்பதற்கு உபாயத்தைக் கையாளுவதில் தயங்கவில்லை.

இன்ஸ்பெக்டர் லயனல் சேனநாயக்காவுடனும் இத்தகவலைத் தெரிவித்தவருடனும், கோட்டை ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்குதான் திரு. ஹேவாவித்தாரணயை இரவு 2-30மணிக்கு மோசடிக்காரர் சந்திக்க அவரைக் கடத்துவதற்குத் திட்டம் போட்டிருந்தார்கள்.

இரண்டு வாலிபர்கள் ஐரோப்பிய உடையில் கோட்டை ஸ்டேஷனில் கைது செய்யப்பட்டார்கள்.

இவர்களில் ஒருவர் திரு. ஹேவாவித்தாரணயிடம் வேலை செய்யும் ஒரு குமாஸதாவின் சொந்தக்காரரென்றும், மற்றவர் சர்வகலாசாலையில் உயர்தர பரீட்சைக்குப் படிக்கும் மாணவன் என்றும் கூறப்படுகிறது. கைது செய்யப்பட்ட இருவரையும் சோதனை செய்தபொழுது இரண்டு செக்குகள் முறையே ரூபாய் 785-50 சதத்திற்கும் ரூபாய் 783-க்கும் கொழும்பு, கொமேர்ஷியல் கம்பெனி மானேஜர் திரு. ஈ. ஜி. ரைஸ் என்பவரின் கையெழுத்து எனக் கை சாத்திடப்பட்டுள்ளதாக அவர்களில் ஒருவரிடம் காணப்பட்டன.

திரு. ஹேவாவித்தாரணயால் கையொப்பமிடப் பட்டதென்று சொல்லப்பட்டுள்ள ரூபாய் 4800-00 க்கு எழுதப்பட்டுள்ள ஒரு செக்கும் அவர்களிடமிருந்து பெறப்பட்டுள்ளனவாம்.

ஒரு புதினப் பத்திரிகையால், மூடப்பட்டுள்ள ஒரு பேனாவும் மைக்கூடும் கைது செய்யப்பட்ட ஒருவரின் சட்டைப் பையில் காணப்பட்டது.

இந்த இரண்டு வாலிபர்களின் வீடுகளும் பரிசோதிக்கப்பட்டபொழுது, மைக்கூடு மூடப்பட்டிருந்த புதினத் தாளின் மற்றப்பாதித்துண்டும் "ஹேவாவித்தாரண கைத்தொழில் பள்ளிக்கூடம்" என்ற தலைப்பு அச்சடிக்கப்பட்டுள்ள கடிதமெழுதும் கடுதாசிகளும் கண்டு எடுக்கப்பட்டன.

இதன் பின்பு போலிஸார் கொழும்பு எல்லைப்புறத்திலுள்ள ஒரு அச்சுக் கூடத்தைச் சோதனை செய்தபொழுது "கொழும்பு கொமேர்ஷியல் கம்பெனி மானேஜிங் டைரக்டர்", "பரிமாறக்கூடாது" முதலிய வார்த்தைகள் பிளாக் செய்து செக்கில் பாவித்திருந்ததைக் கண்டு பிடித்தனர்.

இந்த பிளாக்குகளைப் போலிஸார் தம்முடன் கொண்டு சென்றனர்.

செக் புஸ்தகம் கொமேர்ஷியல் கம்பெனியில் களவாடப்பட்டதன் பின்பு இந்த பிளாக்குகளை அச்செக்கு ஒற்றைகளில் அடித்துத்தரும்படி கைது செய்யப்பட்டவரிலொருவர் அந்த அச்சுக் கூடக்காரரிடம் ஓர்டர் செய்திருந்தார் என அறியப்படுகிறது.

வெள்ளவத்தை, கொள்ளுப்பிட்டி, பம்பலப்பிட்டி, பெட்டா முதலிய இடங்களில் பலரிடம் கள்ளச் செக்குகள் மாற்றப்பட்டுள்ளதாகப் போலிசாருக்கு அறிவித்தல் கொடுக்கப்பட்டிருக்கிறதாம்.

கைது செய்யப்பட்ட இருவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டிருக்கின்றனர்.

போலிசார் இன்னும் விசாரணை செய்கின்றனர்.

பம்பலப்பிட்டி கடற்கரை காடையர்கள் உறைபதியா?

கொழும்பு, அக். 12

பம்பலப்பிட்டி கடற்கரையில் காடையர்கள் அட்டூழியம் மிகவும் மோசமாகவிருக்கின்றது என அறியப்படுகிறது.

இங்கு அபின், கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக்கள் விற்பவர்களும், குற்றமற்ற அப்பாவிகளான ஆடவரை வலிந்திழுக்கும் தாடகைப் பெண்களும் பயமுறுத்திப் பணம் பறிக்கும் போக்கிரிகளும் பொழுது சாய்ந்ததும் நிறையக் காணப்படுகின்றனராம்.

பொது ஜனங்கள் மாலை வேளைகளிலும், இரவு நேரங்களிலும் பம்பலப்பிட்டி கடற்கரை யோரத்தால் தங்கள் தேக சௌக்கியத்தை முன்னிட்டு நடந்துகொள்ள முடியாமல் இருக்கின்றது.

யுத்த காலத்தில் இம்மாதிரி ஒருக்கால் நிலைமை இருந்தது. அபின் அங்குள்ள போலிஸார் இவற்றைத் தடைசெய்து நிறுத்தினார்கள்.

சில தினங்களுக்கு முன்பு ஒருவர் வெள்ளவத்தையிலிருந்து பம்பலப்பிட்டி கரையோரமாக வரும்பொழுது அவரை மூன்று கூட்டம் பெண்கள் இடையிடையே மறித்து தொந்தரவு செய்தார்கள் என்று அறியப்படுகிறது.

ஆங்கிலோ-பாக்கிஸ்தான்கூட்டுக்குஎற்பாடு?

லியாகத் அலி லண்டன் செல்வார்

லண்டன், அக். 10

பாக்கிஸ்தான்பிரதமர் ஸ்ரீ லியாகத் அலிகான் சீக்கிரம் லண்டனுக்கு விஜயம்செய்வார் என்று தெரிகிறது.

லண்டனிலுள்ளபாக்கிஸ்தான் ஹைக்கமிஷனர் சீக்கிரப் லண்டனுக்கு வரும்படி அவரை அழைத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த விஜயத்தின்போது பாகிஸ்தான் அயல் நாட்டுக் கொள்கை உட்பட பல முக்கியமான ஆங்கிலோ-பாக்கிஸ்தான் கொள்கைகள் விவாதிக்கப்படும்.

ஜப்பான் மீது இயற்கையின் கோபம்

வெள்ளம், அலை, புயல், மழை படையெடுப்பு

டோக்கியோ, அக். 11

ஜப்பானில் புயலால் பெரும் அலைகள் மோதியதாலும், வெள்ளத்தாலும் மூன்று வாரங்களுக்கு முன்னதாகத்தான் பெருஞ்சேதம் ஏற்பட்டது. அதனால் இரண்டாயிரம் பேர்கள் மாண்டனர்; இரண்டு லட்சம் பேர்கள் வீடின்றி அகதிகளானார்கள்.

இப்பொழுது மீண்டும் பெரிய புயல் காற்று, கடல் அலைகள், வெள்ளம், மழை இவைகளால் ஜப்பானுக்கு ஆபத்து நேரிடும்போலிருக்கிறது. திங்கட்கிழமையன்று ஹோன்ஷூவின் தெற்குப் பகுதியில் அலைகள் வந்து மோதும் போலிருக்கிறது.

டோக்கியோவுக்கு 100 மைல் தூரத்தில் தெற்கிலுள்ள கரையில் வந்து அலைகள்மோதும்.மணிக்கு 40மைல் வேகத்துக்குஅதிகமாக அடிக்கும் புயல் டோக்கியோ நகரை ஆட்டிவைக்கும். முன்னர் உடைபட்ட அணைகள் இன்னும் பழுது பார்க்கப்படுவதற்கு முன் மீண்டும் இந்நிலைமை ஏற்படுவதால் அபாயம் அதிகமாக இருக்கும். சென்ற 24 மணி நேரமாக டோக்கியோவில் பெரு மழை கொட்டுகிறது. ஐவோஜிமாவில் மணிக்கு 140 மைல் வேகத்தில் அடித்த சுழுவளியால் கட்டிடங்களுக்கு மிகுந்த சேதமேற்பட்டிருக்கிறது. அங்குள்ள ராணுவத்திற்கு ஆபத்து ஏற்பட்டிருக்குமென அஞ்சப்படுகிறது

அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஆர்ப்பாட்டம்

சர்க்கார் சிவில் உத்தியோக மசோதாவை ஆட்சேபித்தும் குறைந்த பட்ச சம்பள நிர்ணயம் கோரியும் ஜப்பான் சர்க்கார் உத்தியோகஸதர்களும் முனிஸிபல் உத்தியோகஸதர்களுமாக பதினாயிரம் பேர்கள் டோக்கியோவிலுள்ள இம்பீரியல் பிளாஸா மைதானத்தில் கூடி ஆர்ப்பாட்டம் செய்தனர். தொழிற் சங்கத் தலைவர்கள் அமைதியை உண்டாக்கிய பின் கூட்டம் கலைந்தது. ஆர்ப்பாட்டம் செய்தவர்களை தலைவர்கள் பிரதம மந்திரியிடம் அழைத்துச் சென்று அவர்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை அவர் முன்பு சமர்ப்பித்தனர்.

(ராய்ட்டர்)

இந்தோனேஷியா பிரச்னை

படேவியா, அக். 11

யுத்த நிறுத்த உத்தரவு சம்பந்தமாக ஆராய்ச்சி செய்த 6 ஸ்தானிகர்கள் கமிட்டி அறிக்கையை தயாரித்து முடித்துவிட்டது. அதன் முக்கிய அம்சங்களை பாதுகாப்புக் கவுன்ஸிலுக்கு தந்தி மூலம் அறிவிக்கத் தீர்மானித்திருக்கிறது. இவை முடிவுகளேயன்றி சிபார்சுகள் அல்லவென்றும், அறிக்கை பின்னர் அனுப்பி வைக்கப்படுமென்றும் அறிவிக்கப்படும்.

மூவர் கமிஷன் விசாரணையில் சமரசப் பேச்சு நடத்த இந்தோனேஷிய குடியரசு சார்பாக நியமிக்கப்பட்ட பிரதிநிதி கோஷ்டியிலிருந்து ஷம்சுதீனும், முகமது ரோபமும் ராஜினாமாச் செய்துவிட்டார்கள். முஸ்லிம் கட்சிப் பிரதிநிதியொருவரை மந்திரி சபையிலும் சேர்த்துக் கொண்டால தான் இவ்விருவரும் பிரதிநிதி கோஷடியில சேருவதாகத தெரிவித்திருக்கின்றனர்.

கிழக்கு இந்தோனேஷியாவுக்குப் புது மந்திரி சபை அமைக்கப்பட்டுவிட்டது.

(ராய்ட்டர்)

கம்பியில்லாத் தந்தி

கண்டுபிடித்தவர் யார்?

மாஸகோ, அக். 11

கம்பியில்லாத் தந்தியை முதலில் கண்டு பிடித்தவர் இத்தாலியரான மார்க்கோனியலலவென்றும் ரஷியரான பாப்பவ் என்பவரே முதலாவது அதைக் கண்டு பிடித்தவர் என்றும் அநேக ரஷ்ய விஞ்ஞானிகள் இன்று "இஸவெஸடியா" பத்திரிகை மூலம் தெரிவித்திருக்கிறார்கள். ஆதலால் ரேடியோ உலகம் முதலாவதாக பாப்பவ் சேவையையே ஒப்புக்கொள்ள வேண்டும் என்கின்றனர்.

(ராய்ட்டர்)

பாலஸ்தீனத்தை கைப்பற்ற 7 அராபிய நாடுகள் போர்க்கோலம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டன் வெளியேறியதும் அராபியர்களை எதிர்த்து பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியில் யூதக் குடியரசை ஸ்தாபிக்க யுத்தசன்னத்தராவார்கள். 25,000 துருப்புகளடங்கிய திடீர் படையினர் முக்கியமான இடங்களில் யுத்த சன்னத்தராக அணிவகுத்து நிற்பார்கள். இவர்களில் 7000 பேர்கள் யூதர் பட்டாளத்தில் அனுபவமுள்ளவர்கள். மீதமுள்ள 40,000 துருப்புகளும் நாட்டில் அமைதியை நிலைநாட்ட பந்தோபஸது செய்து வருவார்கள். சுவிஸ் ராணுவத்தைப்போல இந்த யூத ராணுவத்தை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. பிரிட்டனிடம் பயிற்சி பெற்ற யூத பாரசூட் படையினருமிருக்கிறார்கள். ஐக்கிய தேச கமிட்டி அறிக்கை வகுத்துள்ள எல்லைக் குட்பட்ட பகுதியை பாதுகாத்துக்கொள்ளவே யூதர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்கள்.

மத்திய கிழக்கிலுள்ள அராபிய நாடுகளில நல்ல பயிற்சியுள்ள துருப்புகள் 20,000க்குள் தானிருக்குமென்று யூதர்கள் கணக்கிட்டிருக்கிறார்கள்.

யூதஏஜன்ஸியும ஹகானாவும் கூடி எதிர்கால நடவடிக்கை பற்றி ரகசியமாக ஆலோசனை செய்தார்கள். நாசரேத் மலைகளின் அடிவாரங்களிலுள்ள காடுகளில் யூதர்கள் யுததப் பயிற்சி பெற்று வருகிறார்கள்.

பாலஸ்தீன கமிட்டி விவாதம்

நியூயார்க், அக். 11

ஐக்கிய தேச பாலஸ்தீனக் கமிட்டியில் இன்று அமெரிக்கப் பிரதிநிதி பின்வருமாறு தெரிவித்தார்:- பாலஸ்தீன பிரிவினை பற்றி கமிட்டி சமர்ப்பித்துள்ள அறிக்கை சிறிது திருத்தங்களுடன் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். பிரிட்டன் வெளியேறியதும் பாலஸ்தீனத்தில் அறிக்கையின் திட்டப்படி யூத, அராபிய அரசாங்கங்களை ஏற்படுத்தும்வரை அங்கு அமைதியை நிலைநாட்ட ஐக்கிய தேச ஸ்தாபனம் போலிஸ் தொண்டர் படை நிறுவ வேண்டும் அறிக்கையில் கண்டுள்ளபடி ஒன்றரை லட்சம் யூதர்களைப் பாலஸ்தீனத்தில் குடியேற்ற அனுமதிக்க வேண்டும்.

இந்தியாவின் கருத்து

இந்தியாவின் பிரதிநிதி ஸ்ரீமதி விஜயலட்சுமி பண்டிட் பின்வருமாறு தெரிவித்தார்:--

பாலஸ்தீனத்திலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் அமைதிக்குப் பங்கம் ஏற்படாதிருக்கும்படி செய்வதில் இந்தியாவுக்குச் சொந்த அக்கறையுண்டு.

இந்தியாவும் மத்திய கிழக்கு நாடுகளும் இயற்கையில் எவ்வித ஐக்கியபாவமுடையவை என்பதை ஆசியா படத்தை உற்று நோக்கினாலே தெரியும். பாலஸ்தீனம் அராபிய நாடாகவே இருக்கவேண்டும். அந்த அராபிய நாட்டில் யூதர்கள் அதிக சுதந்திர மனுபவிக்கக் கூடியவாறு அவர்களுக்கு அதிகாரம வரையறுக்கப்படவேண்டும. பாலஸ்தீனத்திற்குப் பூரண சுதந்திரம் வழங்கப்படவேணடும். பாலஸ்தீனத்தில் பிரிட்டிஷ் பாதுகாப்பு நிர்வாகமும் தாமதமின்றி ரத்துச் செய்யப்படவேண்டும்.

சைனா

சீனப் பிரதிநிதி பேசிய போது கமிட்டி அறிக்கையை ஒப்புக்கொள்ள முடியாதென்றும் அராபியரும் யூதரும் சமரசத்திற்கு வர ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தெரிவித்தார்.

சிரியா பிரதிநிதி அமெரிக்காவின் கோரிக்கையை எதிர்த்து தாக்கிப் பேசினார்.

பாலஸ்தீன பிரிவினையை அனுமதிக்க முடியாதென பாரசீகப் பிரதிநிதி தெரிவித்தார்.

அமெரிக்க பிரதிநிதி அபிப்பிராயத்தை யூத ஏஜன்ஸி பிரதிநிதி வரவேற்று யூதர்கள் சம்பந்தமாக அமெரிக்கா தனது பரம்பரையான கொள்கையைக் கைவிடாமல் அனுஷ்டிப்பது கண்டு சந்தோஷப்படுவதாகத் தெரிவித்தார். (ராய்ட்டர்)

மைசூர் சத்தியாக்கிரகப் போர்

சமஸதான சர்க்கார்-காங்கிரஸ சமரசம்

பங்களூர், அக். 11

அரசியல் பிரச்னைகள் சம்பந்தமாக மைசூர் சமஸ்தான சர்க்காருக்கும் மைசூர் சமஸதான காங்கிரஸுக்கும் சமரசம் ஏற்பட்டுவிட்டது. இதுபற்றி மைசூர் மன்னர் கூடிய சீக்கிரம் பிரகடனம் வெளியிடுவார்.

சென்ற இரு தினங்களாக திவானும் காங்கிரஸ தலைவர் கே. சி. ரெட்டியும் சமரசம் பேசியதன் பயனாக புதிய அரசியல் திட்ட சம்பந்தமான முடிவு ஏற்பட்டிருக்கிறது.

(அ-பிரஸ்)

அமெரிக்க உலக விமான போக்கு வரத்து

இரண்டாவது விமானத்தின் பயணம்

புதுடில்லி, அக். 11

அகில அமெரிக்க விமானப் போக்கு வரத்து கம்பெனியார் இரண்டாவது உலக விமானப் போக்கு வரத்து ஸர்வீசை அரம்பித்திருக்கிறார்கள். இதில் கிளிப்பர் விமானங்கள் பயணம் செய்யும்; கல்கத்தா வழியாகச் செல்லும். இது பதினாயிரமைல் தூரத்தை உலகைச் சுற்றி 40 மணி நேரத்தில் பயணம் செய்யும். கல்கத்தாவில் பிரயாணிகள் பசிபிக் கிளிப்பர் விமானத்திற்கு மாற்றப்படுவார்கள். இங்கிருந்து விமானம் பாங்காக், ஹாங்காங், ஷாங்கை, டோக்கியோ, லேக் தீவு, ஹானலுலு வழியாக அமெரிக்கா செல்லும். அல்லது பாங்காக்கிலிருந்தபடியே குறுக்குப் பாதையில் மணிலா மார்க்க மாகப் பல தீவுகளைக் கடந்து அமெரிக்கா போய்ச் சேரும்.

(அ-பிரஸ்)

சூடான் கவர்னர் ஜெனரல் போக்கு

எகிப்து சர்க்கார் கண்டனம்

கெய்ரோ, அக். 11

சூடான் கவர்னர் ஜெனரல் விரோதப்பான்மையாக நடந்து வருவதை ஆட்சேபித்து லண்டனிலுள்ள எகிப்து ஸ்தானிகர் பிரிட்டிஷ் சர்க்காரிடம்எகிப்து சர்க்காரின் கண்டனத்தைத் தெரிவிப்பார்.

சூடான் கவர்னர் ஜெனரல் சர் தாமஸ் கிரீட் ஒரு சூடானியரான தாஹிர் என்பவரை நீதிபதியாக நியமித்து இச்செய்தியை பிரிட்டிஷ் சர்க்காருக்கும் எகிப்து சர்க்காருக்கும் தெரியப்படுத்தியிருக்கிறார்.

சில்லி-யூகோ உறவு ரத்து

பெல்கிரேட், அக். 11

தென்னமெரிக்காவிலுள்ள சில்லி குடியரசு நாட்டிலிருந்து கிழக்கு ஐரோப்பிய பால்கன் நாடான யூகோஸலவியா குடியரசின் ஸ்தானிகத்தைச்சேர்ந்த இரு அதிகாரிகள் மீது கம்யூனிஸட் புரட்சிக் குற்றஞ்சாட்டி அவர்களை வெளியேற்றியதை யூகோ சர்க்கார் பலமாக ஆட்சேபித்து சில்லியின் உறவை ரத்துச் செய்து கொண்டது. சர்வ தேச உறவை சீர்குலைக்க முயலும் ஒரு பெரிய வல்லரசு ஆட்டி வைக்கும் கைப்பொம்மையாக இருந்து சில்லி சர்க்கார் நடவடிக்கை எடுத்துவருவதாக யூகோ குற்றம் சாட்டுகிறது.

[ராய்ட்டர்]

இராமநாதபுரம் மாவட்டம் ஷெடியூல்ட் வகுப்பார் சம்மேளனம்

கொழும்பு, அக். 8

கடந்த திங்கட்கிழமை இரவு பம்பலப்பிட்டியிலுள்ள கங்காதரன் மண்டபத்தில் தலைவர் திரு. பீ. கே. எஸ். வேலு அவர்கள் தலைமையில் சம்மேளனம் நடைபெற்றது. தலைவர் முன்னுரைக்குப்பின் தோழர்கள்: எம். ஏ. பெரியசாமி, எஸ். பொன்னையா சம்மேளனத்துக்கு நாம் செய்யும் தொண்டு என்பதைப்பற்றி பேசினர்.

கிரவுன் தியேட்டர் ஸ்ரின்னர்ஸ் ரோட் மருதானை

தினசரி மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும்
சனியும் ஞாயிறும் மெட்னி 3 மணிக்கும்.

சித்திரகலாவின் உன்னத தயாரிப்பு!

"தாய் நாடு" தமிழ்ப் படம்

வெற்றிகரமான 4-வது வாரம்!

அடக்குமுறைகளுக்கு ஆட்பட்டிருந்த மக்களின் மீட்சிக்காகவும் தாய்நாட்டின் விடுதலைக்காகவும் நடக்கும் போராட்டங்களைக் கொண்டது.

மெட்ரஸ் மெயில் புகழ் பாட்லிங்மணி

புதிய நடிகை சுந்தரி

மற்றும் பலரும் சிறப்புடன் நடித்தது.

பெண்களுக்கும் சிறுவர்களுக்கும் மெட்னியில் டிக்கெட்டுக்கு அரைச் சார்ஜ் எடுக்கப்படும்.

முஸலிம் வீடுகளில் வெடி மருந்து

பீகார் போலிசார் கண்டுபிடித்தனர்

பாட்னா, அக். 10

அநேக முஸ்லிம்களின் வீடுகளிலிருந்து ஏராளமான ஆயுதங்களும், வெடி மருந்துகளும் கண்டு பிடிக்கப்பட்டதன் விளைவாக நகர சப் டிவிஷன் பிரதேசத்தில் பிரதான ரோடு நீங்கலாக சுல்தான் கஞ்சிலிருந்து மஷாலமிவரை ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரவு 7 மணியிலிருந்து காலை 6 மணிவரை ஊரடங்கு அமுல் செய்யப்படும்.

துப்பாக்கிகள், ரிவால்வர்கள், பாட்டில்-குண்டுகள், 1000 ரவுண்டுக்குமேல் சுடுவதற்கான வெடி மருந்துகள் முதலியன முஸ்லிம்களின் வீடுகளிலிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன ஏராளமான ஈட்டிகளும், வாள்களும், பிக்கவாக்களும் கைப்பற்றப்பட்டன. சுமார் 50 உயர்தர போலிஸ் அதிகாரிகளும், ஏராளமான ஆயுதப் போலிசாரும் சேர்ந்து முஸ்லிம்கள் வீடுகளைச் சோதனையிட்டனர்

ஒரு இடத்தில் ஒரு சிறிய ஆயுதசாலை இருக்கக்கண்டு பிடிக்கப்பட்டது; மற்றொரு இடத்தில் தோட்டாக்கள தயார் செய்வதற்கான கருவிகள் அகப்பட்டன.

சுல்தான் கஞ்சின் பெரும் பகுதியை போலிஸார் வளைத்துக்கொண்டுள்ளனர்.

ஒரு போர்வைத் தொழிற்சாலையிலிருந்து ஏராளமான பாட்டில் — வெடி குண்டுகள் கைப்பற்றப்பட்டன. பூமிக்கடியில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த இந்த வெடி குண்டுகளை வெளியே எடுக்கையில ஒன்று வெடித்துவிடவே இரு சார்ஜெண்டுகளுக்கும் பொதுஜனங்களிருவருக்கும் காயமேற்பட்டது. இதுவரை சுமார் 30 முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கலப்பு மணம்

கொச்சி சட்டசபைக்கு தீர்மானம்

எர்ணாகுளம், அக். 10

கலப்பு மணத்தை சர்க்கார் ஆதரிக்க வேண்டுமென்று ஸ்ரீ ஜே. டி. அச்சுதன் சட்டசபையின் அடுத்த கூட்டத்திற்கு ஒரு தீர்மானம் பிரேரித்துளளார். பலவித ஜாதிமத வகுப்புகளைச் சேர்ந்த தனிப்பட்டவர்களின் கலப்பு மணம் மறுபடி மணஞ்செய்து கொள்ளுதல் முதலியவைகளுக்கு தற போதைய சர்க்கார் ஊக்கமளிக்கவேண்டும் என்று இத் தீர்மானம் கூறுகிறது. அடுத்த திங்களன்று ஆரம்பமாகும் கொச்சி சட்டசபையில் இது பிரேரிக்கப்படும். கூட்டத்தில் விவாதிக்கப்பட இருப்பவைகளில் இத் தீர்மானம் முதல் ஸ்தானம் வகிக்கின்றது. இதே அங்கத்தினரால் தயாரிக்கப்பட்ட மற்றொரு தீர்மானம் ஆங்கிலத்திற்குப் பதில் மலையாளம் சர்க்கார் பாஷையாக மாற்றப்படவேண்டும் என்று சர்க்காரை வற்புறுத்துகிறது.

இரு முக்கியமான மசோதாக்களான கொச்சி தொழிலாளர் சச்சரவு மசோதாவையும் கொச்சி வர்த்தக சங்கங்கள் சட்டத் திருத்த மசோதாவையும் வரும் கூட்டத்தில் சர்க்கார் விவாதிக்கும்.

தெ. ஆ. இந்தியர் உரிமைப் போர்

மீண்டும் ஆரம்பம்

டர்பன், அக். 10

இனத்துவேஷக் கொள்கையை எதிர்த்து இந்தியர்கள் போராட்டம் தென் ஆப்பிரிக்காவில் தொடர்ந்து நடைபெறுவதை ஐக்கியநாட்டு ஸ்தாபனத்திற்கு தெரிவிப்பதற்காக அக். 12உ ஞாயிறன்று டர்பனில் சட்டமறுப்பு போராட்டம் மீண்டும் ஆரம்பமாகும்.

உணவு, ஜவுளி கட்டுப்பாடு

காந்திஜி கருத்து

புதுடில்லி, அக். 10

உணவு கட்டுப்பாடு, ரேஷன் எல்லாம் இயற்கைக்கு விரோதமானது. செழிப்பான நிலங்கள் ஏராளமாக இருக்கிறது. நிலமும் வேண்டியமட்டும் கிடைக்கிறது. உழைப்பாளிகளுக்கும் குறைவில்லை. இதெல்லாம் இருந்தும் உணவு தட்டுப்பாடு ஏன் ஏற்படவேண்டும். தன் கையே தனக்குதவி என்றிருக்கும்படி எல்லோருக்கும் போதிக்கவேண்டும். நோயைவிட நோய் வருமென்ற பீதியே பலர் உயிரை மாய்த்துவிடுகிறது. உணவு கண்ட்ரோல்களை எடுத்துவிட்டால் பஞ்சமும் பட்டினிச் சாவும் ஏற்படாதென்று நான் திடமாக நம்புகிறேன் என்று இன்று மாலை நடந்த பிரார்த்தனை பிரசங்கத்தில் காந்திஜி கூறினார்.

மக்களெல்லோரும் தாங்களே நூற்கவும் நெய்யவும் முடியுமாதலால் துணிக் கட்டுப்பாட்டையும் நீக்கவேண்டுமென்றும் உணவைப் போலவே இந்தியாவில் உடைத் தட்டுப்பாடும் ஏற்படுவது நியாயமில்லை என்றும் காந்திஜி கூறினார்.

நிஜாம் தூதுகோஷ்டி

இந்திய கவர்னர் ஜெனரலை சந்தித்தது

புதுடில்லி, அக். 10

கவர்னர் ஜெனரல் லார்டு மவுண்ட் பேட்டன் இன்று பிற்பகலில் ஹைதராபாத் தூதுகோஷ்டியை வரவேற்றார். இந்தத் தூதுகோஷ்டியில் சத்தாரி நவாப் நவாப் அலியார், ஜாங்ஸார் வால்டர், மாநடன், ஸர். சுல்தான் அஹமத் ஆகியோர் உள்ளனர் இந்த சந்திப்பின் போது இந்திய சர்க்கார் சமஸதான இலாகா காரியதரிசி ராவ் பகதூர் வி. பி. மேனனும் கூட இருந்தார்.

சென்னை சர்க்காரின் 5 வருஷ உணவு உற்பத்தி திட்டம்

சென்னை, அக். 11

சர்க்காரின் 5 வருஷ உணவு உற்பத்தி பெருக்கு திட்டம் சம்பந்தமாக 25 அடிஷனல் ஜில்லா விவசாய அதிகாரிகளையும் ஒரு ஜில்லா விவசாய அதிகாரியும் 1947-48ல் நியமிக்கசர்க்கார் உத்தேசித்துள்ளதென்று விவசாய மந்திரி ஸ்ரீ மாதவமேனன் அறிவித்தார்.

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட்டிற்காக, 1947-ம்ஆண்டு அக்டோபர் மீ 13உ இந்த பத்திரிகை 194A. தட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்கரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org